பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை (25-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:119

# பெரும் தாக்குதல்களுக்கு புலிகள் தயாராகின்றனர்!

## குற்றஞ்சாட்டுகின்றார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு,மார்ச்25

**விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்துவிட்டு, பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்குத் தயாராகி வருகின்றனர்.**

**- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

புலிகள் எத்தகைய தாக்குதல்களை நடத்தினாலும் அதனை எதிர்கொள்வதற்குப் படையினர் தயாராகவே உள்ளனர்.

விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்த காலத்தில் 156 தடவைகள் அவர்களே யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளனர். யுத்த நிறுத்தத்தை அறிவித்துவிட்டு, அந்தப் போர்வையில் தமது இயக்கத்துக்குப் புதிதாக ஆள்களைத் திரட்டுவதிலும், தமது படையணிகளை மறுசீரமைப்பதிலும் புலிகள் முனைப்பாக ஈடுபட்டுள்ளனர்.

கிழக்கில் பெரும் தாக்குதலுக்கு அவர்கள் தயாராகின்றனர். எனினும் அத்தகைய முயற்சிகளை இலகுவாக முறியடிக்கக் கூடிய உஷார் நிலையில் படையினர் உள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் 2 நாள்களில் ஏழு சிப்பாய்கள் காயம்

குடாநாட்டில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் ஏழு படையினர் காயமடைந்தனர்.

வியாழனன்று முகமாலை, நாகர்கோயில், அரியாலைப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார்த் தாக்குதலில் ஐந்து படையினர் காயமடைந்தனர் என்றும் -

புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் வியாழனன்று முகமாலையில் ஒரு சிப்பாயும் வெள்ளியன்று கொழும்புத்துறையில் ஒரு சிப்பாயும் ஆள்களுக்கு எதிரான கண்ணிகள் வெடித்ததில் படுகாயமடைந்தனர் என்றும் -

விசேட ஊடகத் தகவல் மையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பெரும் ஆயுதக் கிடங்கு படைகளிடம் சிக்கியது?

கொழும்பு,மார்ச்25

விமான எதிர்ப்பு ஆயுதங்கள், வெடிப்பொருள்கள், தானியங்கி சுடுகலன்கள் உட்பட - சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான - பெரும் ஆயுதக் கிடங்கு ஒன்றை யாழ்ப்பாணத்தில் பொலீஸார் கண்டுபிடித்திருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பிலிருந்து வெளியாகும் 'த டெய்லி மிரர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றின் நிலவறைக்குள் இந்த ஆயுதங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ரி-56 ரக தானியங்கி துப்பாக்கிகள் - 80, முப்பதாயிரம் சுற்று ரவைகள், பசீலன் குண்டுகள் - 75, கிரனேட்டுகள் - 80, கிரனேட் ஏவும் றொக்கட் லோஞ்சர்கள் - 8, றொக்கட் லோஞ்சர்கள் - 6, இயந்திரத்துப்பாக்கிகள் - 6 மற்றும் பிஸ்ரல்கள் சுன்பனவும் அடங்கும்.

"விடுதலைப்' புலிகளின் இத்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யுத்தநிறுத்தம் குறித்து கருத்துக் கூற பிரதமர் மறுப்பு

கொழும்பு,மார்ச்25

தமது ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை நான்காவது தடவையாகவும் விடுதலைப் புலிகள் நீடித்திருப்பது குறித்து கருத்துக் கூற பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மறுத்துவிட்டார்.

தன்னுடைய பாகிஸ்தான் விஜயம் குறித்து நேற்று செய்தியாளர்களுக்கு பிரதமர் எடுத்துக் கூறினார். அவ்வேளை புலிகளின் யுத்தநிறுத்தம் குறித்து பிரதமரின் கருத்தை செய்தியாளர்கள் அறியமுற்பட்டனர்.

அப்போதே "புலிகளின் யுத்த நிறுத்தம் குறித்து என்னால் கருத்துக் கூற முடியாது" - என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் தந்தார் பிரதமர். (உ)

## சுங்க அதிகாரி சுட்டுக் கொலை

சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்றுக்காலை 8.30 மணியளவில் களனிப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அஜித் பிரசன்னா (வயது40) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுக் காலை இவர் தனது காரில் வேலைக்குச் சென்று கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் இவரது காரை வழிமறித்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பேலியகொடைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## மற்றொரு விவசாயி விடுவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியில் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் பதினொரு விவசாயிகளில் மேலும் ஒருவரை அதிரடிப் படையினர் மீட்டுள்ளதாக இலங்கை வானொலி அறிவித்தது.

கடத்தப்பட்ட விவசாயிகளில் ஒருவர் தப்பி ஓடிவந்ததாக ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன. அந்த விவசாயி வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே விசேட அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்தி மேலும் ஒரு விவசாயியை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எஞ்சிய 9 விவசாயிகளின் நிலை குறித்து தகவல் எதுவும் தெரியவரவில்லை (உ-6)

## பொதுக்கூட்டங்கள் நடத்த முடிவு

கொழும்பு,மார்ச்25

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவதற்காகப் பொதுக்கூட்டங்களையும் பொதுமக்கள் பங்குபற்றும் ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்வது என பத்துத் தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி முடிவு செய்துள்ளன.

விடுதலைப் புலிகள் தமது ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை மீண்டும் நீடித்திருப்பது குறித்து நேற்றுக் கூடி ஆராய்ந்த பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு இவ்வாறு முடிவு செய்தது.

"புலிகளின் யுத்தநிறுத்த நீடிப்பை மீண்டும் அரசு நிராகரித்திருப்பது சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கும்" - என்று கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ)

## குமாரின் நினைவுக் கூட்டம்

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் நினைவு மலர் வெளியீடும் இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

## மட்டுநகரில் சுவரொட்டிகள்

மட்டக்களப்பு,மார்ச்25

அன்னை பூபதியின் 13 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நகரின் பல பகுதிகளிலும் அன்னைக்கு அஞ்சலி தெரிவிக்கும் வண்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

அன்னை பூபதியின் படத்துடன் காணப்படும் இந்தச் சுவரொட்டிகள் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவினரால் வெளியிடப்பட்டிருந்தன.

(உ-6)

## யாழ்.மாநகர ஆணையாளர் பதவிக்கு து.வைத்திலிங்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும், வடக்கு, கிழக்கு மாகாண சபையின் வடபிராந்திய ஆணையாளராகவும் கடமையாற்றும் து.வைத்திலிங்கம் யாழ்.மாநகர ஆணையாளராகவும் ஓரிரு தினங்களுக்குள் நியமிக்கப்படுவார் என நம்பகமாகத் தெரியவந்தது.

யாழ்.மாநகரசபை நிர்வாகம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தவிர்த்து, சுமுகநிலை ஏற்படுத்தும் நோக்குடன் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் உயர் வட்டாரங்கள் இந்த நியமனத்தைச் செய்ய முடிவு செய்திருப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநகர ஆணையாளர் பொறுப்பை து.வைத்திலிங்கம் ஏற்றுக் கொண்டு சிறிது காலத்தில் மேலதிக அரசாங்க அதிபர் பதவியை அவர் கைவிடுவார் என்றும் -

எனினும் பிராந்திய ஆணையா

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான சகல ஏற்பாடுகளும் ஏப்ரல்,மே மாதங்களில் பூர்த்தி

### நோர்வே நாட்டுத் தூதுவர் கூறுகின்றார்

கொழும்பு,மார்ச்25

✪ அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுகளுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஏப்ரல், மே மாதங்களில் முடிவடையும்.

✪ நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விரைவில் கொழும்பு வருவார். ஆனால் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பதற்காக அவர் வன்னிக்குச் செல்வதற்கு இப்போதைக்கு வாய்ப்பு ஏதும் இல்லை.

- இவ்வாறு இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் பீற்றர் வெஸ்போர்க் தெரிவித்திருக்கின்றார்.

பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட தன் ஆண்டு நிறைவு தினத்தையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற ஒன்றுகூடலில் பங்குபற்றிய சமயம், தமிழ் அமைச்சர் ஒருவரிடம் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்ததாகக் கொழும்புச் செய்தி வட்டா

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரதேசத்திலிருந்து தெற்கிற்கு நெல் 'ஏற்றுமதி'!

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் பெருமளவில் உற்பத்தியாகியுள்ள நெல்லை ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் வாரம் ஐம்பது லொறி என்ற அடிப்படையில் தென் பகுதிக்கு எடுத்துச்செல்ல இணக்கம் காணப்பட்டுள்ளது.

வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட தலைமையில் நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற உயர்மட்டக் குழுக் கூட்டம் ஒன்றில் இந்த இணக்கம் காணப்பட்டது.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள், வன்னிப் பகுதிப் படைத் தளபதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

பெருமளவில் விளைந்துள்ள நெல்லை சந்தைப்படுத்த முடியாமல் வன்னிப் பகுதி விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்பது தெரிந்ததே. (உ-6)

## $3\frac{1}{2}$ கிலோ தங்கக் கட்டிகளுடன் பிரதி அமைச்சரின் மகன் கைது

கொழும்பு,மார்ச்25

சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான மூன்றரைக் கிலோ தங்கக் கட்டிகளைக் கடத்த முயன்ற - பிரதி அமைச்சர் ஒருவரின் மகன் - அவரது மெய்ப்பாதுகாவலருடன் சேர்த்து - நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு கொம்பனித்தெரு பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

பௌத்த சாசன பிரதி அமைச்சர் எதிர்வீர பிரேமரத்னவின் மகனே அமைச்சரின் உத்தியோகபூர்வ வாகனத்தில் தங்கக் கடத்தலில் ஈடுபட்ட சமயம் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மேற்படி அமைச்சரின் மகனுக்கு விலாசமிடப்பட்டு வெளிநாட்டிலிருந்து அஞ்சலில் அனுப்பப்பட்ட பொதி ஒன்றை கொழும்பு பிரதம தபாலகத்

(14ஆம் பக்கம் பார்க்க)

கர்நாடக இசை உலகுக்கு ஓர் இளையவன்!
ஆம்!!
இன்று (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை
துர்க்கா மணிமண்டபத்தில் அரங்கேறும்
சங்கீதரத்தினம்
திரு.மா.சிதம்பரநாதன் அவர்களின் மாணவன்
**செல்வன் ஸ்ரீ விக்னேஸ்வரன் உமாசுதன்**
அவர்களின்

## மிருதங்க அரங்கேற்றம்

சிறப்புற எமது நல் வாழ்த்துக்கள்!
(85787) சிவாஸ் - மூளாய்

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒரு தசாப்த காலம் பணியாற்றி நேற்று எம்மை விட்டுப் பிரிந்த கல்லூரியின் துணை ஆளணியைச் சேர்ந்த

## க.இலகுநாதன்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C/15891) - யாழ்.இந்துக் கல்லூரிச் சமூகம்.

# நன்றி நவிலல்

கடந்த 16.03.2001 வெள்ளிக்கிழமை காலமான

## இம்மனுவேல் பிலிப் தம்பிராஜா

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து எமது வீட்டுக்கு வருகை தந்தோர், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர் வளையம் சாத்தித் துயரில் பங்குபற்றியோர், கண்ணீர் அஞ்சலி செலுத்திய யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிச் சமூகத்தினர் மற்றும் யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரிச் சமூகத்தினர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரிச் சமூகத்தினர் ஆகிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அன்பு மனைவி*
திருமதி
மேரி மக்டலின் பிலிப் தம்பிராஜா
*அச்சுவேலி.* (85839)

# வணிகர் கழகக் கூட்டம்

நுணாவில், மட்டுவில், சரசாலை வணிகர் கழகக் கூட்டம் 28.03.2001 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் ஈசன் கல்வி நிலையத்தில் நடைபெறும். அன்றைய தினம் வர்த்தகர்களின் நஷ்டஈட்டுப் படிவம் வழங்கப்பட இருப்பதால் கடை உரிமையாளர்கள் அனைவரும் தவறாது சமுகம் தந்து படிவத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

*நுணாவில், மட்டுவில், சரசாலை வணிகர் கழகம்.* (85850)
செ.நித்தியானந்தன் (செயலாளர்)

# தேவை

1. கணனி அச்சமைப்பாளர் (பயிலுநர்)
   Coral draw Pagemaker (தெரிந்தவர்) விரும்பத்தக்கது.
2. ஒப்புநோக்குநர்

நேரில் வரவும்

## பிள்ளையார் அச்சகம்

*578, பருத்தித்துறை வீதி, நல்லூர்.* (85839)

# சைன்

உடுவில்

## A/L 2003

| | |
|---|---|
| கணக்கீடு | - D.SAM |
| பொருளியல் | - P.மோகன் |
| வணிகக்கல்வி | - V.நந்தீஸ் |
| தமிழ் | - V.M.லிங்கம் |
| அளவையியல் | - S.சயந்தன் |
| இந்துநாகரிகம் | - S.சுரேஸ் |
| இந்துசமயம் | - S.சுரேஸ் |
| நாடகமும் அரங்கியலும் | - S.றமேஸ் |
| கிறிஸ்தவ நாகரிகம் | - தேவா |
| புவியியல் | - பிரபல ஆசிரியர் |

நேரஅட்டவணை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். (85831)

## O/L DAY CLASS

## சைன்

உடுவில், அளவெட்டி, மல்லாகம்
கடந்தகால சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த ஆசிரியர் குழுவால் கற்பிக்கப்படும்.

ஆரம்பம் :- 28-03-2001
8.00 மணி

குறிப்பு:- கிழமையில் 8 மணித்தியாலம் கணித வகுப்புகள். (85832)

## லஷ்சுமி இணுவில்

விஜயகாந்த் (3வேடங்களில்)
மந்த்ரா, செந்தில்
நடிப்பில்

## சிம்மாசனம்

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.) (85816)

## நாகம்ஸ்

சுன்னாகம்
அஜித், கார்த்திக், மீனா
நடித்த

## ஆனந்தப் பூங்காற்றே

(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (பு.நே.) (85843)

## ராஜா யாழ்ப்பாணம்

11 அக்கடமி அவாட் பெற்ற சிறந்த படம்

## டைட்டானிக்

தமிழில்
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
28.03.2001 முதல்
வானத்தைப் போல (C/15741)



உ

# உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 12ஆம் நாள் நாளை (26.03.2001) திங்கட்கிழமை ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் பகல் 10.15 - 10.45 மணிக்கு இடைப்பட்ட இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்

அனலைதீவு பிரம்மஸ்ரீ நடராசக் குருக்கள் - ருக்குமணி அம்மா
நீராவியடி பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் - சீதாலக்ஷ்மி அம்மா
ஆகியோரின் பௌத்திரனும் எமது துவிதிய புத்திரனுமாகிய
**சிரஞ்சீவி மாரீஸ்வரா சர்மா அவர்களுக்கு**

அனலைதீவு புளியந்தீவு அருள்மிகு நாகேஸ்வரப் பெருமானதும் யாழ்.வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாளினதும் திருவருளினால் உபநயனப் பிரம்மோபதேசம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்துள்ளனர். அத்தருணம் குடும்ப சகிதம் சமுகமளித்து சிரஞ்சீவியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.2, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (C/15881)

தங்களன்புள்ள நல்வரவை விரும்பும்:
பிரம்மஸ்ரீ ந.தாமோதர ஐயர்,
வல்லவாம்பிகை தம்பதிகள்.

# காணி விற்பனைக்கு

கிணற்றுடன் கூடிய 3 பரப்பு, 10 குளி காணி கண்டி வீதியில் கச்சேரிக்கும் றெயில்வே ட்றக்குக்கும் இடையில் விற்பனைக்கு உண்டு. தினமும் மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் தொடர்புகொள்ளவும்.

செ.சிவலிங்கம்,
'ஜனனோதயம்'
செல்வராசா அவெனியூ,
அம்மன் வீதி, திருநெல்வேலி.
(85842)

# மரண அறிவித்தல்கள்

## கதிரேசு சின்னக்கண்டு (மேசன்)

சிவன் கோயிலடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கரவெட்டியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு சின்னக்கண்டு (மேசன்) 22.03.2001 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மாம்பழத்தின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, சிவனேஸ்வரி, கலியுகவரதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அருணாசலம், பொன்னுத்துரை (இ.மி.சபை, சுன்னாகம்), செல்வக்குமார் (சுவிஸ்), கணேசமூர்த்தி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பசுவதிப்பிள்ளை மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகம்மா, சோதி மற்றும் கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற சபா, கனகம்மா, தங்கம், சின்னத்தங்கம், யோகேஸ்வரி, தனபாலசிங்கம், இராசம்மா ஆகியோரின் மைத்துனரும், முருகதாஸ், குகதாஸ், சிவதாஸ், அருண்தாஸ், யாழினி, செல்வரஜனி, நந்தகுமார், கஜேந்திரன், கலக்ஷனா, பார்த்தீபன், வசீகரன், டினேஸ்குமார், டர்சன், கோபிராஜ் ஆகியோரின் பேரனும், டக்சிக்கா, சுகந்திகா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-03-2001 வியாழக்கிழமை அவரது தற்காலிக வசிப்பிடமான கரணவாயில் நடைபெற்று பூதவுடல் அள்ளாங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தற்காலிக முகவரி:
*சாளம்பன்,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்
ப.பொன்னுத்துரை
(மருமகன்)
(இ.மி.ச.)

நிரந்தர முகவரி:
*சிவன் கோயிலடி,*
*சாவகச்சேரி.* (85837)

## திருமதி லோறன்ஸ் சவிரிமுத்து மாசிலாமணி (மணி)

நெடுந்தீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி லோறன்ஸ் சவரிமுத்து மாசிலாமணி (மணி) அவர்கள் நேற்று(24-03-2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற லோறன்ஸ் சவரிமுத்துவின் (செல்லர்) அன்பு மனைவியும் அடைக்கலமேரி (ராணி), தியாகராசா (பப்ளி), மரியமகேஸ்வரி (ராசாத்தி), மேரிகொலஸ்ரிக்கா (வர்ணம்), மேரி றேமன் (பிறேமா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யேசுதாசன் (முன்னாள் விலைக் கட்டுப்பாட்டுப் பொறுப்பதிகாரி), யமுனா, குணநாயகம் (சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) கிங்ஸ்லி (லண்டன்), செல்வநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், றூபா (ஆசிரியை, கொழும்பு), நிர்மலராஜ் (மாநகரசபை, யாழ்ப்பாணம்), கொலின் (லண்டன்), பேனி (லண்டன்), யூஜின் (லண்டன்), டிலோ, ஜனா, வினோ, செல்வா, கமிலஸ், கோமஸ், றொஷானி, ரம்யா, நித்யா, யோவான் ஆகியோரின் பேர்த்தியும் டிலான், பௌசியா, நர்மதா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நெடுந்தீவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*56, டேவிற் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (85846)

தகவல்:
சைமன் குணநாயகம்
(மருமகன்)

## நல்லையா சுந்தரலிங்கம்

(ஓய்வு பெற்ற பட இயக்குநர், சினிமாஸ் லிமிட்டெட்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிராம விஸ்தரிப்புத் திட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சுந்தரலிங்கம் 23.03.2001 வெள்ளிக்கிழமை வவுனியாவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நல்லையா தம்பதிகளின் அன்பு மகனும், இராசரத்தினம் தம்பதிகளின் மருமகனும், வனிதமலரின் அன்புக் கணவரும், உமாகாந்தன் (ஜேர்மனி), சோமகாந்தன் (தாஸ் ஸ்ரோர்ஸ், கஸ்தூரியார் வீதி), சிவாஜினி (வவுனியா), றாஜினி (வவுனியா), வினோதினி, கஜேந்தினி (செங்குந்த இந்துக் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகுமார் (சுகந்தன் ஸ்ரோர்ஸ், வவுனியா), கணேசலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், கெளதூரியின் அன்புப் பேரனும், சந்திரமலர், பாலரத்தினம், நவரத்தினம் (வவுனியா), சற்குணரத்தினம் (கொழும்பு), குணரத்தினம், பத்மநாதன், தனேந்திரன் ஜே.பி., இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வவுனியாவில் மகளின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

அவரின் திருநெல்வேலி இல்லத்திலும் துக்கம் அனுட்டிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
(சோ.மு)
*158,கிராம விஸ்தரிப்புத் திட்டம்,*
*திருநெல்வேலி.*

வவுனியா முகவரி:-
*143,மன்னார் வீதி,*
*வவுனியா.* (85845)

# உதயன்

## கையில் புறா; முதுகில் குண்டு!

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தப் போவதாகக் கூறி, அதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. ஆரம்ப கட்ட நடவடிக்கைகளிலேயே ஐந்து மாதங்கள் கழிந்து விட்டன. எல்லாம் சாதகமான நிலைக்கு வந்தாலும் நேரடிப் பேச்சுக்கள் தொடங்க ஆகக் குறைந்தது இன்னும் இரண்டு மாதங்களாகும் என்று ஊகிக்கப்படுகிறது.

பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கே இவ்வளவு காலம் என்றால், அதன் பெறுபேறுகள் தெரிவதற்கு எத்தனை காலமாகுமோ என்று மக்கள் சலித்துக் கொள்கிறார்கள். சமாதானப் பேச்சு; அதன் மூலம் இணக்க நிலை — தீர்வு — என்பது வெறும் காலங் கழிக்கும் உத்தியோ என்று மக்கள் சந்தேகமுறும் விதத்தில் அரசாங்கம் ஆமை வேகத்தில் அசைகிறது.

அது ஒருபுறமிருக்க, போரைத் தீவிரப்படுத்துவதிலேயே அதிக நாட்டம் செலுத்துகிறது. விடுதலைப்புலிகளின் முகாம்களை அல்லது தளங்களை அழிப்பதாகக் கூறிக்கொண்டு, பொது மக்களின் வாழ்விடங்களையும் பொது மக்களையும் அழித்து வருகிறது

1990 ஆம் ஆண்டு தொடக்கம் புலிகளை அழிப்பதாகக் கூறியவாறே வடக்கு-கிழக்கு மக்களையும் அவர்களின் சொத்துகளையும் அழிக்கும் செயலை அரசாங்கப் படைகள் செய்து வருவது எழுதப்பட்ட வாய்ப்பாடாகி விட்டது.

செய்வதையும் செய்து கொண்டு, தமிழ்மக்களின் நலன்களில் அக்கறை காட்டுவதாகவும் கொழும்பு அரசுகள் நாடகமாடுவது வழக்கத்துக்குரிய நடைமுறையாகிவிட்டது.

இதனை மறைப்பதற்காகவே போர்ச் செய்திகளுக்குத் தணிக்கையும், போர்ப் பிரதேசங்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர் செல்வதற்குத் தடையும் என்று கட்டுப்பாடுகள் தொடர்ந்து இறுக்கப்படுகின்றன,

இரண்டு தரப்புகளும் தீவிர சண்டையில் ஈடுபட்ட காலத்தில் உண்மையை — தோல்விகளை — மக்கள் அழிவுகளை — மறைப்பதற்காக; பொய்யை மெய்யாக்குவதற்காக செய்தித் தணிக்கையும் பத்திரிகையாளருக்கான தடையும் விதிக்கப்பட்டதென்றால் —

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தைக் கைக்கொண்டு மூன்று மாதங்கள் கழிந்தும் தணிக்கை விதிகள் நீக்கப்படவில்லை. காரணம் இல்லாத காரியம் இல்லை. தணிக்கை விதிகள் தொடர்கின்றன என்றால் வடக்கு-கிழக்குப்பிரதேசத்தில் ஒரு தரப்பின் — அரசாங்கத்தின் — அழிவு வேலைகளைத் தொடர்வதற்காகவே என்று கொள்ளலாம்.

அது சரியான மதிப்பீடே என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் குடிமக்களின் வாழ்விடங்கள் — இலக்குகள் — மீது விமானப்படையின் 'சுப்பர் சொனிக்' விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுச் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

நல்லிணக்கம் காண்பதில் அரசுக்கு உண்மையான அக்கறை இருப்பின் இத்தகைய அநியாயத்தில் ஈடுபடும் தேவை இல்லை. கையில் சமாதானப் புறாவைக் காட்டிக்கொண்டு முதுகில் குண்டைக் கட்டி வைத்திருக்கும் இரட்டைத் தனம் நீடித்தால் சமாதானம் இலங்கையை திரும்பியும் பார்க்காது. இதனை அரசாங்கத்துக்கும், அதன் தலைவர்களுக்கும் உணர்த்துவது யார்?

## சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

சுதுமலை வீதியில், லொறியுடன் மோதுண்டு மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்தவிபத்தில் காயமடைந்த சுதுமலையைச் சேர்ந்த எஸ். மில்ரன் என்ற சிறுவன் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-6-5)

## திருமறைக் கலாமன்றத்தின் 'காவிய நாயகன்'

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின் 'காவிய நாயகன்' என்ற நாடகம் எதிர்வரும் 5 ஆம் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் மாலை 6.15 மணியளவில் திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேறவுள்ளது.

கிறிஸ்துவின் பாடுகளைச் சித்திரிக்கும் இந்த நாடகம் வருடா வருடம் திருமறைக் கலாமன்ற கலைஞர்களால் மேடையேற்றப்பட்டு வருகிறது.

'காவியநாயகன்' இந்தத் தடவை திருமறைக் கலாமன்ற அரங்கில் மட்டுமே மேடையேற்றப்படவுள்ளதாகவும், இதற்காக நாடகத்தை முன்னிட்டு ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துவது தொடர்பாக இராணுவ தரப்பினருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் திருமறைக் கலாமன்றப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

நாடகம் பார்க்கத் தூர இடங்களில் இருந்து வரும் பொதுமக்கள் மன்ற மைதானத்தில் தங்கிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)

## புத்தாண்டுப் பண்டிகை முற்பணம்

சண்டிலிப்பாய், மார்ச் 25

யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் யாழ் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கு எதிர்வரும் தமிழ் புத்தாண்டுப் பண்டிகையை முன்னிட்டுப் பண்டிகை முற்பணம் வழங்கப்படவுள்ளது.

நிரந்தர, தற்காலிக ஊழியர்கள் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைய ஊழியர்கள் ஒன்பது மாத கால சேவையைப் பூர்த்தி செய்திருக்கும் பட்சத்தில், நிரந்தர ஊழியர் ஒருவரின் பிணையுடன் இக்கொடுப்பனவைப் பெற விண்ணப்பிக்க முடியும் என்றும் யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-135,

# முகாம்களில் முடக்கிய படைகளை களத்தில் இறக்க வேண்டும்

## நாடாளுமன்றில் சிஹல உறுமய எம். பி.

கொழும்பு, மார்ச் 25

கடந்த சில மாதங்களாக சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்காக, இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு இராணுவத்தினர் முகாம்களில் முடக்கி வைக்கப்பட்டுள்ளனர். இந்தக் காலத்தினுள் புலிகள் பலம் பெற்று வருவதால் யுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு அவர்களை இராணுவ ரீதியில் முற்றாக அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—இவ்வாறு சிஹல உறுமய எம். பி. திலக்கருணாரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தை ஒஸ்லோவிலோ, சுவீடனிலோ நடத்துவது குறித்து அண்மைக்காலமாகப் பேசப்படுகிறது. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை நாம் ஆரம்பம் முதல் எதிர்த்து வருகிறோம். புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் அழிக்க வேண்டும்.

ஆனால் கடந்த சில மாதங்களாக இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர் முகாம்களில் முடக்கி வைக்கப்பட்டுள்ளனர், இந்தக் காலத்தில் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வர். எனவே தாக்குதல்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும் தேசிய ரீதியான பிரச்சினைகளின் போது நாம் கட்சி ரீதியில் மோதிக் கொள்ளாது, ஒருமைப்பாட்டுக்கு வர வேண்டும்.

2020 ஆம் ஆண்டாகும் போது, சிறுபான்மை இனத்தவர் ஒருவர் ஜனாதிபதியாக வர முடியும் என வர்த்தக சம்மேளன தலைவர் கூறியுள்ளார். இந்தக் கனவு ஒரு போதும் நடக்காது இன்றிருக்கும் அரசியல் முறையே அதற்குக் காரணம்.

சிங்களவரோ, தமிழரோ, முஸ்லிமோ யார் ஜனாதிபதியாக வந்தாலும் எமக்கு ஆட்சேபனையில்லை. தகுதியான ஒருவரே ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்-என்றார்.

(க)

## மட்டு.கல்வியியற் கல்லூரியின்

# கட்டடப் பணிகள் முடிந்ததும் கணிதம், விஞ்ஞானப் பயிற்சிகள்

## நாடாளுமன்றில் கல்வி அமைச்சர் உறுதி

மட்டக்களப்பில் 400 மில்லியன் ரூபா செலவில் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுவரும் கல்வியியற் கல்லூரிக்கட்டடத்தொகுதிதிட்டமிட்டபடி 2003 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படும். அதன் பின்னர் கணிதம், விஞ்ஞானப் பயிற்சிகளும் ஆரம்பமாகும்.

இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கட்டடப்பணிகள் பூர்த்தியடைந்ததும் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பயிற்சி வழங்கப்படக்கூடிய வசதிகள் கிடைக்கும் என்றும் இதன் மூலம் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் உறுதியளித்தார்.

மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக்கல்லூரி தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த உயர் கல்வி தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சர் இந்திகுணவர்த்தன —

இந்த இசை நடனக்கல்லூரியைத் துரிதகதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

[க-6]

# இராணுவ வாகனம் மோதி காயமடைந்தவருக்கு நஷ்டஈடு

## மட்டக்களப்பு நீதிவான் உத்தரவு

கொழும்பு, மார்ச் 25

மட்டக்களபபு — திருமலை வீதியில் பிரதான பொலீஸ் நிலையத்திற்கு சமீபமாக இராணுவ பவள் வாகனம் மோதியதில், காயமடைந்த செ. வீரசிங்கம் என்பவருக்கு ஐயாயிரம் ரூபா செலுத்துமாறும் அரச செலவாக 6000 ரூபா செலுத்துமாறும் மட்டக்களப்பு நீதிவான் ஏ. எல். அப்துல் கபூர் உத்தரவிட்டார்.

1999 ஆம் ஆண்டு மே மாதம் சிறிய வான் ஒன்றுடன் பவள் மோதியதாலேயே இவர் காயமடைந்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். இளையராஜா, மனுதாரருக்கு காலில் முறிவு ஏற்பட்டதால் அவருக்கு 25 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்தே நீதிவான் 5 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறு உத்தரவிட்டார்.

(க)

## யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### வைத்தியனாய் நின்றருளுவாய்

வண்ணையிலே வந்துறையும் வைத்தீஸ்வரா-உன்
வார்கழல்கள் போற்றுகிறோம் வந்தருளுவாய்
எண்ணமதில் எத்தனையோ நோய்கள் உள-நீ
எங்களது வைத்தியனாய் நின்றருளுவாய்.

ஆசைகளின் வேகமதில் அலைக்கழிகின்றோம்-அந்த
அல்லலினால் துன்பச்சுமை தாங்கி நிற்கிறோம்.
மாசகற்றி ஒளிபெருக்கிச் சுமை தவிர்க்கவும்-உன்
மங்கலமாம் பாதமினைப் பணிந்து நிற்கிறோம்.

ஆலயத்தில் கொடியுயர்த்தி அகமகிழ்கிறோம்-தினம்
அற்புதமாய் உற்சவங்கள் செய்து வைக்கிறோம்.
வாழ்வகத்தில் அருட்கொடியை நீ உயர்த்துவாய்-தினம்
வையகத்தில் உனைவணங்கி வாழச்செய்குவாய்.

= கோப்பாய் சிவம்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய குளிர்த்தி விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

(க-ரி)

★ ★ ★

யாழ். கந்தர்மடம் அன்னசந்திர ஒழுங்கை வேம்படி சித்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறும். தினமும் மாலை 5 30 மணிக்கு அபிஷேகம் இடம்பெறும்.

9 ஆம் திகதி மணவாளக் கோல தின சங்காபிஷேகமும் மாலை திருவூஞ்சலும் இராமப் பிரதஷணமும் இடம் பெறும்,

(க)

★ ★ ★

ஏழாலை மேற்கு தேவி ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 7. 00 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம் பெறும்.

(ம)

★ ★ ★

வடலியடைப்பு - பாரத்தனை ஸ்ரீ பூர்ண புஷ்கலா சமேத அரிஹர புத்திர ஐயப்ப சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம், நாளை திங்கட்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமையன்று வருடாந்த குளிர்த்தி விழா இடம் பெறும்.

(க-135)

★ ★ ★

மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய இராஜகோபுர, சந்தான கோபால புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7-25 மணிக்கு நடைபெறவுள்ளது.

(க-86)

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய மணவாளக்கோல விழா நாளை திங்கட்கிழமை காலை இடம்பெற உள்ளது. அன்று காலை 10 மணிக்கு நூற்றெட்டு சங்காபிஷேகமும் மாலை 4 மணிக்கு சுவாமி திருவுலாவும் இடம் பெறும்.

(க-85)

★ ★ ★

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 5ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் உற்சவக் கிரியைகளை சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக்குருக்கள் நிகழ்த்துவார்.

(க-152)

### உதயவாக்கு

ஓர் ஆண்டுக்குள் ஒரு சிறந்த நண்பனைப் பெற முடியாது; ஒரு மணி நேரத்தில் ஒரு சிறந்த நண்பனை இழந்து விட முடியும்.

### நாளை

பங்குனி 13
திங்கட்கிழமை
திதி: பிரதமை
முற்பகல் 8 . 12 வரை.
நட்சத்திரம்: ரேவதி
முன் இரவு 7.57 வரை.
சுபநேரம்: 12.15—1.45
ராகுகாலம்: 7.45 - 9.15
(பழைய நேரப்படி)

# நன்றி நவில்கின்றோம்

கடந்த 18-3-2001 அன்று காலமான

## திருமதி சிந்தாமணி கண்மணி

அவர்களின் துயரச் செய்தியைக் கேட்டு மடல் மூலமும், பத்திரிகைகள் வாயிலாகவும், வானொலி மூலமாகவும் எமக்கு அனுதாபம் தெரிவித்த அனைத்து அன்பு நெஞ்சங்களான புதிய உயர் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

= குடும்பத்தினர்.

டிஸ்பன்செறி,
உரும்பிராய் வடக்கு.

(85788)

# வாழ்த்துகின்றோம்

இன்று மிருதங்க அரங்கேற்றம்
காண இருக்கும் கலை மிளிரும்

பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை
அன்னையின் தரம் 5 மாணவன்

## செல்வன் ஸ்ரீவிக்னேஸ்வரன் உமாசுதன்

அவர்கள் இக்கலையில் மேலும் சிறப்புற
அகவயப்பேருவகையுடன் வாழ்த்துகின்றோம்.

[85795] பாடசாலைச் சமூகம்

அச்சுவேலி கதிரிப்பாய்

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

நாளை பங்குனித் திங்கள் 26—03—2001 திங்கட்கிழமை நண்பகல் 12. 00 மணியளவில் அம்மனுக்குரிய ஆலய புனர் நிர்மாணத்தை முன்னிட்டு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

கும்பாபிஷேக பிரதமகுரு
சிவஸ்ரீ சி. ஆறுமுகக்குருக்கள் தலைமையில்
சிவஸ்ரீ பா. சோமசுந்தரக்குருக்கள்
கிரியைகளை நடத்துவார்.

க. நடராசா ஐயா
தர்மகர்த்தா

(85822)

# கசிப்புக்காரருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம்

சட்டவிரோதமான முறையில் 120 'டிராம்ஸ்' கசிப்பை வீட்டில் வைத்திருந்த ஒருவரை 60 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ .ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

தகவல் ஒன்றையடுத்து கரணவாய் வடக்குப் பகுதிக்குச் சென்ற நெல்லியடி இன்ஸ்பெக்டர் எச். ஏ. தகம்பத் தலைமையிலான பொலீஸார் சந்தேகத்தின் பேரில் இராசன் தருமலிங்கம் (வயது 40) என்பவரைக் கைது செய்து பெருமளவு கசிப்பையும் ஏனைய உபகரணங்களையும் மீட்டிருந்தனர்.

சந்தேக நபரை நெல்லியடி பொலீஸார் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம் 60 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். [க-109]

# கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம்

வலி.மேற்குப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம் ஒன்றை அமைப்பதற்கான நிகழ்வு யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. செல்வரத்தினம் தலைமையில் சங்கானைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வலி. மேற்குப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மு. சிவராசா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். தியாகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் 23 சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் 13 பேர் கொண்ட நெறியாளர் சபையும் தெரிவு செய்யப்பட்டது. (க-10-29)

# பருத்தித்துறைப் பிரதேச சபை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய ஒப்பந்தகாரர்களிடம் இருந்தும், இதற்கான தகுதியினை உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடம் இருந்தும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

படிவ விநியோகம்:- 05-04-2001 ஆம் திகதி 16. 00 மணிவரை
படிவம் ஏற்றல்:- 06-04-2001 ஆம் திகதி 12 00 மணிவரை
படிவம் திறத்தல்:- 06-04-2001 ஆம் திகதி 14. 00 மணிக்கு

அட்டவணை

| வேலை விவரம் | கேள்விப் படிவக் கட்டணம் | | | வைப்பு (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|---|
| 1. ஆண்டிப் பனை வீதி அமைத்தல் | 100/- உம் | பொ. சே. | வரியும் | 1000/- |
| 2. கதிரவேற்பிள்ளை வீதி திருத்தம் | 100/- உம் | " | " | 1250/- |
| 3. குடத்தனைக் கிணறுக்கு சுற்று முற்றம் அமைத்தல் | 100/- உம் | " | " | 250/- |
| 4. மாணாண்டிச் சந்தைக் கடை கதவு நிலை அமைத்தலும் பூச்சு வேலையும் | 100/- உம் | " | " | 500/- |
| 5. குடத்தனைச் சந்தைக் கட்டடம் புனரமைப்பு | 100/- உம் | " | " | 1000/- |

மேலதிக விவரங்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன்
ஜே. பி. யு. எம்.
தலைவர்,
பருத்தித்துறைப் பிரதேச சபை.

பருத்தித்துறைப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்.
20—03—2001

(சி/15870)

# கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் மீதிகள் உறுதிப்படுத்தல்

1998/1999, 1999/2000 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதனால், சகல வைப்பாளர்களும், கடனாளிகளும் 31-5-1999, 31-5-2000 ஆகிய திகதிகளில் உள்ள மீதிகளை உறுதிப்படுத்தும் வகையில், 5-4-2001, 6-4-2001, 9-4-2001 ஆகிய தினங்களில் கிராமிய வங்கியில் தங்கள் பதிவேடுகளைக் கணக்காய்வாளரின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செ. கெங்காதரன்,
பொது முகாமையாளர்.

(சி/15871)

# மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில் மணவாளக்கோல உற்சவம்

விநாயக அடியார்களே!

**எதிர்வரும் 30 - 03 - 2001 வெள்ளிக்கிழமை**

காலை 9 மணி தொடக்கம் ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையாருக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். தொடர்ந்து திருவூஞ்சல் நிகழும்.

உயர்திரு. T. S. அப்புத்துரை அவர்கள்
உபயமாக அன்னதானம் நடைபெறும்.

குறிப்பு: பக்தர்கள் காலை 9 மணிக்குமுன் தெல்லிப்பழை தடைமுகாமுக்கு வரவும், பஸ்மூலம் அழைத்துச் செல்லப்படுவர்.

— அறங்காவலர்

(85813)

# கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் திருமகள் அழுத்தக ஊழியர்

## சிவசம்பு நித்தியானந்தம்

(தில்லைகட்டி, சுன்னாகம்)

அவர்கள் 35 வருடங்களுக்கு மேலாக எமக்கு ஈந்த சேவையை இன்று திடீரென இழந்து தவிக்கின்றோம். இப்பேரிழப்பை எம்மாலேயே தாங்க முடியவில்லையென்றால் அவர் குடும்பத்தினர் எப்படித்தான் தாங்குவார்களோ? எல்லாம் இறைவன் செயல் என்று சாந்தி அடைவோம்.

ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக!

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானத்தினரும்,
சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினரும்.

(85801)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 04 — 08 — 1966



ஆண்டவன் பிடியில் 17 — 03 — 1991

## அமரர் சிவபுரநாதர் சிவராசா (சிவன்)

(பாதுகாப்பு ஊழியர், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்)

**திதி: 25 - 03 - 2001**

பத்து வருடம் பறந்ததையா
பாவிகள் நாம் உமைப்பிரிந்து
சித்தம் கலங்குகின்றோம்
சிவனே உம் பிரிவால்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு நன்றி.

உம் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அக்கா, மருமகன்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(85739)

### மன்னாரில் லொட்ஜில் கைதாகி

# பாலியல் வல்லுறவு, சித்திரவதைக்குள்ளான பெண்கள் மருத்துவ சோதனைக்கு மறுப்பு

### உளரீதியாக மேலும் வற்புறுத்த வேண்டாமெனக் கதறி அழுதனர்

கொழும்பு,மார்ச்25

மன்னாரில் உள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்தவேளை கைதாகி சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை துன்புறுத்தல்களுக்கு ஆளானதாகக் கூறப்படும் இரு பெண்களும் வைத்திய பரிசோதனைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த இருவரும் வைத்திய பரிசோதனை என்ற பெயரில் தம்மை உடல்ரீதியாகவோ உளரீதியாகவோ மேலும் துன்புறுத்த வேண்டாம் என்று வைத்திய அதிகாரியிடம் கதறி அழுது மறுத்து விட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட இரு பெண்களும் மிக மோசமான முறையில் பாலியல் மற்றும் உளரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வன்னியில் இருந்து வவுனியாவுக்குச் செல்வதற்கென மன்னார் உப்புக் குளத்திலுள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த வேளையிலேயே இந்த அவலம் நேர்ந்துள்ளது.

இருவரும் ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமான நிலையில் 'எஸ்லோன்' குழாயினால் தாக்கப்பட்டுள்ளனர். பின்னர் இவர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரின் உடல்களிலும் வெளிக்காயங்கள் இல்லாத போதிலும் உட்காயங்கள் இருப்பதாகவும் உடலில் இலேசான கீறல் காயங்கள் தென்படுவதாகவும் இவர்களை நேரில் சந்தித்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

### செயலகத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்25

கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உதவியாளர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களைப் பெற்றவர்கள் பிரயாண அனுமதிப் பத்திரங்களுடன் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்குச் செல்பவர்களின் விவரம் வருமாறு:-

செ.இறைவன் (புலோலி வடகிழக்கு), ப.பரநீதரன் (அராலி வடக்கு), கே.கணேசமணி (அரசடி வீதி, நல்லூர்), எஸ்.சாந்திகுமார் (நாவலடி, கோப்பாய் மத்தி), ப.அருள்ராஜ் (மவுந்திபுலம், காரைநகர்), கி.நித்தியானந்தம் (நருவிலியடி, புலோலி தெற்கு), எம்.சஞ்ஜயன் (அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி), பீ.பத்மகாந்தன் (மடம் ஒழுங்கை, திருநெல்வேலி), இ.பரதன் (சட்டநாதர் வீதி, நல்லூர்), செ.கபிலன் (அம்பலவாணர் வீதி, அத்தியடி) (ஐ-5)

### மண்டபம் புனரமைப்பு

சுழிபுரம்,மார்ச்25

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் தேர் தரிப்பிட மண்டபப் புனரமைப்புப் பணிகள் 4 லட்சம் ரூபா செலவில் பூர்த்தியாகியுள்ளன. (க-28)

### 'ராகிங்'கை முற்றாகத் தடுத்துள்ள

# யாழ். கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட மாணவருக்குப் பாராட்டு

### ஈ.பி.டி.பி. ஏற்பாட்டில் நாளை வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.தேசிய கல்வியியற கல்லூரி சிரேஷ்ட மாணவர்களைப் பாராட்டிப் பரிசில் வழங்கும் வைபவம் ஒன்றை ஈ.பி.டி.பி. அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

தேசிய கல்வியற் கல்லூரியில் 'பகிடிவதை'க்கு இடமளிக்காமல், அதனை அடியோடு களைவதில் உறுதியாக இருக்கும் மாணவர்களின் கொள்கையைப் பாராட்டுவதற்காகவே ஈ.பி.டி.பி. அமைப்பினர் இந்த வைபவத்தை நடத்த உள்ளனர்.

இதற்கான அனுமதியை தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் வழங்கியுள்ளார்.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இந்த வைபவம் கல்லூரியில் நடைபெறும்.

தேசிய கல்வியற் கல்லூரிக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களையும் இந்த வைபவத்தில் வைத்து ஈ.பி.டி.பியினர் வழங்கவுள்ளனர். (ஐ)

### அகதி முகாம் வாழ்க்கையால்

# குடாநாட்டில் காச நோயாளரின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து

யாழ்ப்பாணம்,மார்ச்25

கடந்த சில வருடங்களாக யாழ். மாவட்டத்தில் காச நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதாரப் பகுதி புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்வு, அகதிமுகாம் வாழ்க்கை, போசாக்கின்மை மற்றும் மிதமிஞ்சிய மது பாவனை போன்ற பல்வேறு காரணங்களினால் காச நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நோயினால் சிறுவர்களும் வயது முதிர்ந்தவர்களுமே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

1997 ஆம் ஆண்டில் 173 காச நோயாளர் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டில் 215 நோயாளராக அதிகரித்துள்ளதுடன் இவ்வாண்டில் மேலும உயரலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சை பெறாமல் இருப்பதனால் நோயாளர் எண்ணிக்கையை முழுமையாகக் கணக்கிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு தொடர்ந்து இருமல் காணப்பட்டால் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவ ஆலோசனைகள் பெறப்பட வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். காச நோயாளர்களுக்கு சமூக சேவைப் பகுதியினால் 150 ரூபா முதல் 500 ரூபா வரை மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க-5)

### அதிக வரி அறவிடத் தீர்மானம்

கொழும்பு,மார்ச்25

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மிளகாய், வெங்காயம் என்பவற்றின் மீது பெரும் தொகையான வரியை அறிவிடுவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு கிலோ மிளகாய்க்கு 30 ரூபாவும் ஒரு கிலோ வெங்காயத்துக்கு 10 ரூபாவும் வரியாக அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-6)

# நான்காவது தமிழுக்கு இடந்தரும் தேவை நிறைந்த காலம் இது!

**பண்டிதர் க.நாகலிங்கம் எழுதிய *'செந்தமிழ் இலக்கண விளக்கம்'* (முதலாம் பாகம்) என்ற நூல் குறித்து வித்துவான் க.சொக்கலிங்கம் நூல்வரிசைக்கென எழுதிய விமர்சனம் பொதுக்கட்டுரைக்குரிய அம்சங்களையும் கொண்டிருப்பதால் வாசகர்களின் நலன் கருதி அதனைச் சுருக்காமல் இங்கு தருகிறோம்.**

தமிழிலக்கணம், உலகவழக்கு, செய்யுள்வழக்கு என்ற இரு பகுப்புக்களின் அடிப்படையில் தமிழ் மொழிக்கு வரம்பு செய்கின்றது. இவற்றுள் உலக வழக்கு என்பது, மொழியியலார் இன்று கொள்வதுபோல பொதுமக்கள் வழக்கன்று. அஃது உயர்ந்தோர் வழக்கு. உயர்ந்தோர் என்போர் தமிழ் மரபு உணர்ந்தோர். அவர்கள் பேசுவதும் எழுதுவதுமே செந்தமிழ். செந்தமிழ் ஆவது நேரிய பிழையற்ற தமிழ். பொதுமக்கள் பேசுவதும் எழுதுவதும் கொடுந்தமிழ். கொடுமை என்ற பண்புப் பெயரின் வேர்ச்சொல் 'கோடு'. இதன் பொருள் வளைவு. அஃதாவது நேரற்ற பிழை மலிந்த தமிழ். தமிழிலக்கண ஆசிரியர் தம் வழக்குப் பற்றிய கோட்பாட்டிற்குச் சாதகமும் பாதகமுமான கருததுக்கள் இன்று நிலவுகின்றன. அவற்றை விவாதிக்க இஃது இடமன்று.

நாம் எடுத்துக் கொள்ளும் ஆய்வு, *'செந்தமிழ் இலக்கண விளக்கம்'* என்ற நூலாதலின், அதன் பரப்பளவுள் நின்று நூலாசிரியரின் நோக்கத்தினை முதலிற் காண்போம்.

"பண்டிதத்துக்குரிய சாமானியத் தன்மைக்கு மேற்பட்ட விசேஷமுடையவர், தமிழாசிரியத் தகைமை பெறும அதேவேளை, தமிழ்ப் பண்டித தகைமையும் சமகால வினைவாக விளைவித்தற்கென இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பரமேஸ்வராக் கல்லூரியில் பிரத்தியேகமாக நடைபெற்ற பண்டித ஆசிரிய பயிற்சியிற் சேர்ந்து தலைசிறந்த தமிழாசிரியர்களான பண்டிதமணி க.சு.நவநீதகிருஷ்ணபாரதியார், வித்துவான் க.கார்த்திகேசு முதலானோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயந் திரிபறக் கற்றுத் தெளிந்து பயிற்றப்பட்ட பண்டித ஆசிரியராக மலர்ந்தவர். அத்துடன் 1951-52இல் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக்கழகத் "தமிழ் டிப்ளோமா"விலும் தேறியுள்ளவர், பாலபண்டித, பண்டித பரீட்சார்த்திகள் பலருக்கும் பரோபகார சிந்தையுடன் கற்பித்துப பலன் கண்ட அநுபவசாலி, எல்லாவற்றுக்கும் மேலாகச் சேவைக்காலம் முழுவதும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி தலைமைப் பண்டிதராய் இருந்து மாணவரின் தமிழ் இலக்கணத் தேர்ச்சிக்கு ஆக வேண்டுவற்றை அனுபவத்திற் கண்டவர்" ஆன நூல் ஆசிரியர், தாம் இவ்விலக்கண நூலினை எழுத நேர்ந்த காரணத்தை (நோக்கத்தை)ப் பின்வருமாறு கூறுகின்றார்.

## தமிழை ஒரு பாடமாகப் பயில்வோர் பழந்தமிழ் இலக்கியங்களை விளங்குதல் நன்று

"இலக்கண வழஞ்சான்ற தமிழ் மொழிக் கல்வியை இலக்கண வரம்பில்லாத பிறமொழிக் கல்விபோல கற்பிக்க முற்பட்டதே தமிழ் இலக்கணம விரும்பப்படாத நிலைக்கு தள்ளபபட்டமைக்கு முக்கிய காரணம் எனலாம். இந்நிலையைப் போக்கி தமிழ் இலக்கணத்தின் ஆழ அகல மாண்பினை வெளிக்கொணர வேண்டுமென்னும் நோக்கே செந்தமிழ் இலக்கண விளக்கத்தின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாகும்" ஆசிரியரின் கூற்று புலப்படுத்தும் கருத்துக்களுள்ளே குறிப்பிடத்தக்கவை இரண்டு. அவை யாவன:

I *தமிழ் இலக்கணத்தைப் பிற மொழிக் கல்விபோல கற்பிக்க முற்பட்டமை தவறு. ஏனெனில் பிற மொழிக்கு இலக்கண வரம்பில்லை.* இக்கருத்துக்கு உகந்த விடை தர வல்லவர் பிறமொழி இலக்கணம் உணர்ந்தவர்களாதலின் இதனைத் தவிர்ப்போம்.

II *தமிழ் இலக்கணத்தின் ஆழ அகல மாண்பினை வெளிக்கொணரல்.* தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம், வீரசோழியம் முதலாம் இலக்கண நூல்களையும், இந்நூல்களுக்கு உரைவழங்கிய உரை ஆசிரியர்களையும் (கர்த்தா ஆகு பெயர்), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையும் (கர்த்தா ஆகுபெயர்) நன்கு கற்றும் கற்பித்தும் தேர்ந்த அனுபவம் வாய்ந்தவர் ஆதலின் நூல் ஆசிரியர் தமிழ் இலககணத்தின் ஆழ அகல மாண்பினை வெளிக்கொணர முற்பட்டமை முற்றிலும் பொருத்தமானதே.

இலக்கண நூல்கள், நூற்பா, உரை, எடுத்துக்காட்டு, வியாக்கியானம் முதலாம் முறைமைகளைக் கையாண்டு சுருக்கமாகவும், தெளிவாகவும் விளக்கும் முறையில் அமைவதே மரபு. ஆனால், ஆங்கில இலக்கண நூல்களின் போக்கினை அனுசரித்தும், உரை நடையின் மேலாண்மையைக் கருத்திற் கொண்டும ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கத்தில் நூற்பாக்களைத் தவிர்த்தார், காலத்துக்கு வேண்டியவற்றைத் தொடக்கநிலை மாணவருக்கேற்ப அந்நூலிலே தந்தார். இலக்கண வினா விடை, இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகை, நன்னூல் விருத்தி, தொல்காப்பியம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, நேமிநாதம், வீரசோழியம் என்ற கிரமத்துக்கு அவர் வழிவகுத்தார்.

### மு.வ. முன்னோடி

1856இல் கால்ட்வெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற ஆங்கில நூல் வாயிலாக ஒப்பிலக்கண விளக்கத்தை கட்டுரை வடிவில் எழுத வழிவகுத்தார். இலக்கணக் கல்வி மொழி நூலுக்கு (Philology) உதவத் தொடங்கி, அது ஒரு பாடமான பொழுது மு.வரதராசன் மொழி நூலைக் கட்டுரை வடிவிலே 1947இல் எழுதி தமிழுக்கு இவ்விடயத்தில் முன்னோடியானார். மொழிநூல் மொழியியலாக (Singuistics) வளர்ந்த பொழுது, சா.ஸ்ரீநிவாசன், ஆ.வேலுப்பிள்ளை, அ.சண்முகதாஸ் (பேராசிரியர்கள்) முதலானோர் இவ்வழியைப் பின்பற்றலாயினர். இம்முறை, காலத்துக்கு உகந்ததாகவும், பயில் நிலையில் உள்ளோர்க்கு வழிகாட்டியாகவும் இருப்பதை உணர்ந்தபோது நூலாசிரியர் தமது 'செந்தமிழ் இலக்கண விளக்கத்தினை' கட்டுரை வடிவில் அமைத்து, இடையிடையே நூற்பா மேற்கோள்களையும் தந்து அவற்றின் பொருளை ஒப்பிட்டு, இலககண வல்லாரது முடிவுகளையும், தமது முடிவுகளையும் தெளிவாகத் தந்துள்ளார். இம்முறைமை பாராட்டத்தக்கதாகும்.

தொல்காப்பியத்தை அடித்தளமாகக் கொண்டாலும் நன்னூலின் பகுப்பு முறையும், பொருளடக்கமும் பெருமளவு கையாளப்பட்டன. நன்னூலார் 'சொற்றொடர்' எனத் தனித்து வகுக்காமையை உளங்கொண்டு ஆசிரியர் *'தொடர்மொழி இயல்'* என ஓர் இயலினைக் கூடுதலாகச் சேர்த்துள்ளார். அது வேண்டியதே. (நாவலா தமது 'இலக்கணச் சுருக்கத்தில்' தொகைநிலைத் தொடரியல், தொகா நிலைத் தொடரியல் என்று இரண்டு இயல்புகளை வகுத்துள்ளமையையும் ஈண்டு நோக்கத்தக்கது).

இலக்கணக் கல்வியானது, பயில் நிலை, பயன் படும் நிலை என்ற இரு வழிகளிலும் மேற்கொள்ளப்பட வேணடியது என்பதை எவரும் மறுக்கார். பயில் நிலையில் மாணவர் தமிழின் தொன்மையான மொழிக் கட்டமைப்பினை விளங்கிக் கொள்ள வாய்ப்பு உண்டாகும். இவ்வாறு பயின்ற இலககணத்தினை பயன்படு நிலையிலே இலக்கியங்களில் பிரயோகிப்பதன் வாயிலாக குறித்த இலக்கியங்களின் பொருளினை நன்கு விளங்கிக் கொள்ள வாய்ப்பு உண்டாகும். இது மிகவும் இன்றியமையாததே.

இவ்வகையிலே, பள்ளிகளிலே தமிழை ஒரு பாடமாகக் கற்கும் உயர்தர மாணவருக்கும், பல்கலைக் கழக மாணவருக்கும் 'செந்தமிழ் இலககண விளக்கம்' எய்ப்பில் வைப்பாக உதவும். இதனைப் பயில் நிலைக்கு கருவியாகக் கொள்வோர் அடையக் கூடிய பெரும் பயன், பழந்தமிழ் இலககியங்களை விளங்கிக் கொள்வதே என்பதை அழுத்திக் கூறவேண்டியுளளது. இது பயன்தரும் முயற்சியாகும். ஏனெனில் இந்நூல் ஆசிரியரின் பாண்டித்தியம், மரபு வழிப்பட்ட பழந்தமிழ் நூல்களுடனேயே பெரிதும் ஊடாட்டம் கொண்டதாகும்.

### நான்காவது தமிழ்

கணனி யுகமாக மாறிக்கொண்டு இருப்பதும், அறிவியற் தமிழ் என்ற நான்காவது தமிழுக்கு இடம் அளிக்க வேண்டிதும், புனை கதைகள், புதுக் கவிதைகள், திறனாய்வுகள், வெகுசனத்தொடர்பு சாதனங்கள் என்பன மிக விரைவாக மேலாண்மை பெற்றுக் கொண்டிருப்பதுமான ஒரு காலகட்டத்தில் நாம் சிலவற்றை விரும்பியோ விரும்பாமலே உள்ளீர்த்து சீரணிக்க வேண்டியவர்களாய்விட்டோம். 'தொன்மையை முற்றிலும் நன்று' எனப் போற்றும் பக்தியுள்ளம் வாய்க்கப் பெற்ற நூலாசிரியரான பண்டிதர் க.நாகலிங்கம் அவர்களுக்கும் இச் சீரணிப்பு தவிர்க்க முடியாது போய் விட்டது எனலாம்.

தமிழ் பேசும் நல்லுலகம் தேர் ஆகவும், அத்தேரில் எழுந்தருளிய தமிழன்னை வணக்கத்துக்குரிய தெய்வமாகவும், மரபு உணர்ந்த தமிழ் வல்

**சொக்கன்**

லார் வடம் பிடித்து இழுப்போராகவும், இலக்கண ஆசிரியர் மிண்டி போடுபவராகவும் இருந்த காலம் மீளுமா என்பதே இன்றுள்ள கேள்வி. கண்டம் விட்டுக் கண்டம் பாய்வனவும் ஒலியிலும் வேகமானவுமான ஏவுகணைகள், துணைகோள்கள் உலா வரும் காலத்தில், மிண்டிக்கு உண்டாகக்கூடிய மதிப்பு, கேள்விக்குறியாவதைத் தவிர்த்தல் இயலாது!

ஆங்காங்கே உரையாசிரியர்களின் சொல்லாட்சிகள் தலை எடுத்த போதும், தெளிவான அழகான, படிக்கச் சலிக்காத உரை நடையினைக் கையாண்டு தமது முதன்மையான ஆற்றலை நூலாசிரியர் புலப்படுத்தியுள்ளமை பாராட்டுக்குரியது. ▲

உ
அம்பாள் துணை

# பவள விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 12 ஆம் நாள் இன்று (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை பிரதமைத் திதியும், உத்தரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் முற்பகல் 10 மணியளவில் -

**கோண்டாவில் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயம்,**
**கோண்டாவில் குமரக்கோட்டம் ஞான வைரவர் கோயில்**
**பிரதமகுருவும் ஆகிய காசிப கோத்ரம்**

**சிவஸ்ரீ**
**சோமசுந்தரக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள் - பத்மாவதி அம்மா தம்பதிகளுக்கு**

ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் திருவருளினால் எமது இல்லத்தில் பவளவிழா நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய சகலருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

**வரதராஜன்- சுதாமதி தம்பதிகள்,**
**ஜெயந்திநாதக்குருக்கள்- ஜெயகௌரி தம்பதிகள்,**
**கிருஷ்ணமூர்த்திசர்மா- மாலதி தம்பதிகள்,**
**சோமசுந்தரசர்மா- புஸ்பமாலா தம்பதிகள்,**
**பத்மராஜசர்மா- ஜெயந்தினி தம்பதிகள்,**
**வாசுதேவசர்மா,**
**கிருபாகரசர்மா-சசிரேகா தம்பதிகள்,**
**சசிகரசர்மா மற்றும் பேரப்பிள்ளைகள்.**

*"ஜெயகௌரி வாசம்"*
*101,லக்சபானா றோட்,*
*தோணிக்கல்,*
*வவுனியா.*
***T.P 024 20464***

(85792)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| அன்னை மடியில் | | மண்ணின் மடியில் |
|---|---|---|
| 06 - 06 - 1989 | | 09 - 02 - 2001 |

## செல்வன் மகேந்திரன் சுபாஸ்கரன்

புத்தூர் மேற்கு, சுன்னாகம் வீதியைச் சேர்ந்த செல்வன் மகேந்திரன் சுபாஸ்கரன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லம் நாடி ஓடிவந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு சகல விதத்திலும் துணைபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு -

*இன்று (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய வைபவங்களிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.*

ஓம் சாந்தி !

**தகவல்:**
**அ.மகேந்திரன் (அப்பா)**
**ம.யோகமலர் (அம்மா)**
**அண்ணன்மார்,**
**விமர்சிகா (தங்கை).**

*மருதடி,*
*சுன்னாகம் வீதி,*
*புத்தூர் மேற்கு,*
*புத்தூர்.*

(85790)

# அனலைதீவில் மக்கள் வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்25

மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையின் நடமாடும் சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்சேவையில் அனலைதீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பொதுமக்களும் பங்கு கொண்டு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுமாறும் -

பொதுமக்கள் தமது சிறு சேமிப்புகளை அதிகரித்துக் கொள்ளவும் பல்வேறு கடன் வசதிகளைப் பெற்று சுயதொழில் முயற்சிகளைத் தொடரவும் இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்த முடியும் என்றும் -

மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறை முகாமையாளர் ஜி.சற்குணபாலன் தெரிவித்துள்ளார்.

(க-5)

# மட்டுவில் கமலாசனி ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்25

மட்டுவில் கமலாசனி வித்தியாலய ஆசிரியர்களுக்கான மார்ச் மாத சம்பளம் மற்றும் விழா முற்பணம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

நெல்லியடியிலுள்ள பாடசாலை அதிபரின் அலுவலகத்தில் சம்பளம் மற்றும் விழா முற்பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-5)

# நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை மாணவருக்கு !

யாழ்ப்பாணம், மார்ச்25

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்பொழுது வேறு பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் 10வயது பூர்த்தியாகியும் இதுவரை விசேட அடையாள அட்டை எடுக்காதவர்கள இரண்டு புகைப்பட பிரதிகளுடனும் -

சென்ற வருடம் தரம்8 சித்தியடைந்த மாணவர்கள் தங்கள் விடுகைப்பத்திரங்களைப் பெற்று கொள்ளவும் வட்டு இந்துக் கல்லூரிக்கு வருகை தருமாறு அதிபர் நா.அருட்சோதி கேட்டுள்ளார்.

(க)

**அறிவகம் கல்வி நிலையம்,**
அச்சுவேலி

***A/L 2003***
**கலை,வர்த்தகம்**
**புதிய பிரிவுகளுக்கான வகுப்புகள்**
**ஆரம்பம்:28.3.2001**
**புதன் 4.00 p.m.**
☼ அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

(85785)

# நல்லூர் பிரதேச சபையின் மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2001

நல்லூர் பிரதேச சபையினால் - எமது பிரதேச சபை எல்லைக்குள் இயங்குகின்ற - சனசமூக நிலையங்களுக்கிடையே மாபெரும் விளையாட்டுப்போட்டி ஒன்றை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் நிமித்தம் பின்வரும் விளையாட்டுக்களுக்கு சனசமூக நிலையங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதைபந்தாட்டம் - 11 நபர்கள் கொண்ட விலகல் முறை**
**02. துடுப்பாட்டம் - 07 நபர்கள் கொண்ட 06 பந்துப் பரிமாற்றங்கள்.**
**03. கரப்பந்தாட்டம் -** Set up game / Over game.
**04. வலைப்பந்தாட்டம் - பெண்களுக்கானது.**
**05. தாச்சி - இருபாலாருக்குமானது.**
**06. கபடி - இருபாலாருக்குமானது.**
**07. ஆண்/பெண் - சைக்கிள் ஓட்டப்போட்டி.**
**08. ஆண்/பெண் - மரதன் ஓட்டப்போட்டி.**

**மெய்வன்மை நிகழ்ச்சிகள் (இருபாலாருக்குமானது)**
I 100m, 200m, 400m, 800m, 1500m, 3000m.
4x100m, 4x200m, 4x400m (அஞ்சலோட்டம்).
**II உயரம் பாய்தல், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல், கோல் ஊன்றிப் பாய்தல், குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல்.**

**காட்சி நிகழ்ச்சிகள்:-**

**01. கயிறிழுத்தல் (ஓர் அணியில் 12 நபர்கள்)**
**02. கிறீஸ் கம்பம் ஏறல்.**
**03. முட்டி உடைத்தல்.**
**04. தலையணைச் சண்டை.**
**05. மெதுவான சைக்கிள் ஓட்டம்.**
**06. போர்த் தேங்காய் அடித்தல்.**

## போட்டிகளுக்கான நிபந்தனைகள்:

01. எமது பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் மாத்திரம் பங்குபற்றலாம். ஆனால் எமது சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்போரும், ஆறு மாதங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து எமது சபை எல்லைக்குள் வசிப்போரும் பங்குபற்றலாம்.
02. குழு விளையாட்டுகளுக்கு ஒவ்வொரு சனசமூக நிலையங்களிலும் இருந்து இரண்டுக்கு மேற்படாத அணிகள் பங்குபற்றலாம்.
03. மெய்வன்மை விளையாட்டுகளுக்கும், 100m, 200m, 400m போட்டிகளுக்கும் தலா ஒவ்வொரு வீரரும் ஏனைய விளையாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டுக்கு மேற்படாத வீரரும், ஒவ்வொரு சனசமூக நிலையங்களின் சார்பிலும் பங்குபற்றலாம்.
04. மெய்வன்மை நிகழ்ச்சிகள் இரு பிரிவுகளாக நடத்தப்படும். (01.01.1984 க்கு முன்பு பிறந்தவர்கள், பின்பு பிறந்தவர்கள்)
05. விண்ணப்பக்கட்டணம் - குழு விளையாட்டுகளுக்குத் தலா ரூபா 25 மெய்வன்மை விளையாட்டுக்கள் யாவற்றுக்கும் ரூபா 50.
06. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 30.03.2001 ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (அலுவலக நேரத்தில்)
07. பங்கு பற்றும் வீரர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்காத வண்ணம் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் போட்டிகள் நடத்தப்படும்.

☛ எமது பிரதேசத்தில் இயங்கும் பாலர் பாடசாலைகளுக்கென விசேடமான நிகழ்ச்சிகளும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் 30.03.2001 ஆம் திகதிக்கு முன்னர் எம்முடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

**மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.**

**க.மணிபல்லவராஜன்** (J.P.U.M)
கௌரவ தலைவர்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

(C/15872)

உ
சல்லியம்பதி விநாயகர் துணை

# 15 ஆவது நாள் நினைவஞ்சலியும் சபீண்டிகரண அழைப்பும்

விக்கிரம வருடம் மாசி மாதம் 29 ஆம் நாள் (13.03.2001) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையார்



அமரர்

## சிதம்பரப்பிள்ளை நடராசா ஐயா

*(பொலிகண்டி சல்லியம்பதி வீரகத்தி விநாயகர் ஆலய உரிமையாளரில் ஒருவரும் அர்ச்சகரும்)*

அவர்களின்ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**2001.03.27 செவ்வாய்க்கிழமை காலை 6.00மணி**
**பாசாண ஸ்தாபனம் (கல்லெடுப்பு)**
**2001.03.28 புதன்கிழமை காலை 9.00 மணி**
**சபீண்டிகரணம்**

எமது இல்லத்தில் நடைபெறும் மேற்படி கிரியைகளில் பங்குபற்றி இறைவனடி சேர்ந்த அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

திரு. நடராசா ஐயா மகேந்திரராசா ஐயா.

*கந்தவனம்,*
*பொலிகண்டி, வல்வெட்டித்துறை.*

(85702 )

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் 13ஆம் நாள் நாளை (26.03.2001) திங்கட்கிழமை காலை 11.14 மணி முதல் 01.14 மணி வரையுள்ள மிதுனலக்கின சுபமுகூர்த்த சுப வேளையில்,

**எமது புத்திரன்**
**திருநிறை செல்வன்**
**அற்புதநேசன்**
**அவர்களுக்கும்**



**எமது புத்திரி**
**திருநிறை செல்வி**
**சுரேசினி**
**அவர்களுக்கும்**

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்பு உபசாரம்:** ***மணமகன் இல்லத்தில் 27.03.2001 மாலை 4 மணிக்கு.***
*தங்கள் நல்வரவை விரும்பும்*

M.அற்புதராசா
(BABY பஸ் உரிமையாளர்)
நிரந்தர முகவரி: *டச்சு றோட், சாவகச்சேரி.*
தற்காலிக முகவரி: *59/3, குமாரசுவாமிப் புலவர் வீதி, சுன்னாகம்.*


திரு.திருமதி செ.சிவநேசன்
(மில் உரிமையாளர்)
*548, K.K.S.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

T.P - 070 212421 (இருவீட்டார் அழைப்பு)

(85791)

# 'எங்கள் பரமேஸ்வரன்'

# 16ஆம் நாள் அஞ்சலி



## அமரர் முருகேசு பரமேஸ்வரன் B.A., S.L.P.S.I

(முன்னாள் அதிபர், யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி)

### வாழ்க்கைக் குறிப்பு

☆ பிறப்பு : 25.10.1935 கோலாலம்பூர், மலேசியா.

☆ கல்வி : மலேசியா ஆங்கிலோ சைனீஸ் பாடசாலை, மலேசியா (1948 வரை)
1949 இலங்கை வருகை, 1949 - 51 செங்குந்த இந்துக் கல்லூரி.
1952 - 53 யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரி.
1956 கலைப் பட்டதாரி (ஆங்கில மொழி மூலம்)

☆ தொழில் : 1957 முதல் நியமனம். யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி.
1967 - பதிவுத் திருமணம்
1968 - திருமணம்
1969 - ஆசிரியர், உபஅதிபர் ஓமந்தை மகா வித்தியாலயம்.
1975 - ஆசிரியர் - கொழும்புத்துறை ம.வி., யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி, தொண்டமனாறு ம.வி.
1984 - மகன் பிறப்பு
1986 - பிரதி அதிபர், செங்குந்த இந்துக் கல்லூரி.
1988 - அதிபர், செங்குந்த இந்துக் கல்லூரி.
1995 - ஓய்வு.

**தன்னலம் கருதாத சேவையுாளன்.. ஆரவாரமின்றி அமைதியாகக் கல்விப்பணி புரிந்த வள்ளல்...... பகட்டுக்கோ அன்றிப் பட்டம் பதவிகளுக்கோ பறந்தடிக்காமல் எளிமையின் இருப்பிடமாய் வாழ்ந்துமுடித்த மேதை!**

**வாழ்க நின்புகழ்!**

நீங்கா நினைவுகளுடன்:-

**இ.சண்முகநாதன்** (கிராம அலுவலர், அரியாலை), **ஆ.செல்லத்துரை** (ஜே.பி.), **க.அருள்நாதன்** (கிளை முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), **க.இராசையா, பொ.அருளம்பலம், ந.அமிர்தலிங்கம், செ.தனபாலசிங்கம், எஸ்.பத்மராஜா, ஏ.ஞானசேகர்.**

C/15878)

# நெஞ்சை விட்டு நீங்காத நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## 33ஆம் நாள்

மலர்வு 06 - 04 - 1908



உதிர்வு 21 - 02 - 2001

**அமரர் ஆறுமுகம் பொன்னையா**

## 4ஆம் ஆண்டு

மலர்வு 05 - 08 - 1911



உதிர்வு 03 - 03 - 1997

**திருமதி பொன்னையா அன்னமுத்து**

**நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதைவிட்டு நீங்கவே நீங்காது! எந்நாளும் - உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!**

இன்று (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சியில் அன்னாரின் நினைவு மலருடன் "பொன் அன்ன நீதிசாரம்" எனும் நூலும் வெளியிடப்படும். தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து எல்லா வைபவங்களிலும் கலந்துகொண்டு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*முருகேச பண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.*

(85797)

பொ. குமாரசிங்கம் (மகன்),
கெ.நிர்மலாதேவி (மகள்).

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன்

## தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

### தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

### ஆரம்பம்: - 02-04-2001

மாணவர்களே, ஆசிரியர்களே!

இன்றைய அறிவுசார் சமுதாயத்தை எதிர்கொள்ளத்தக்க வகையிலும், சுயதொழிலில் ஈடுபடத்தக்க வகையிலும், கணனிக் கல்வி உட்பட சகல துறைகளிலும் கூடிய செய்முறை வகுப்புகளுடனும், போதிய வசதிகளுடனும், *பயிற்சிக் கட்டணங்களில் சலுகைகள் மூலமும்* நீங்கள் பயிற்சியை மேற்கொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் எமது நிறுவனம் என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**1. A) ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING.**

- I) SYSTEM ANLYSIS
- II) DATA PROCESSING
- III) FUNDAMENTAL OF COMPUTER TECHNOLOGY
- IV) D BASE FOR WINDOWS
- V) PASCAL
- VI) VISUAL BASIC
- VII) EXCEL

DURATION: ONE YEAR

**B) DIPLOMA IN MICRO SOFT OFFICE** — DURATION: 6 MONTHS

**C) DIPLOMA IN TYPE SETTING** — DURATION: 3 MONTHS

**D) DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING** — DURATION: 4 MONTHS

**E) DIPLOMA IN DESK TOP PUBLISHING** — DURATION: 6 MONTHS

- i) WORD
- ii) PRINT SHOP DELUX
- iii) PAGE MAKER
- iv) COREL DRAW
- v) PHOTO SHOP

**F) DIPLOMA IN ACCESS** — DURATION: 3 MONTHS
INCLUDING S.Q.L

**2. CERTIFICATE COURSES**

| | | |
|---|---|---|
| i) MS WORD -2000 | ii) MS EXCEL -2000 | iii) MS ACCESS -2000 |
| iv) MS POWER POINT | v) VISUAL BASIC VR.6 | vi) PASCAL |
| vii) d. BASE III+ | viii) PAGE MAKER | ix) WINDOWS 95 |
| x) COREL DRAW | xi) D BASE FOR WINDOWS | xii) PRINT SHOP DELUXE |
| xiii) Adobe PHOTO SHOP. | | |

DURATION: 3 MONTHS EACH

**3. SHORT HAND AND TYPING (ENGLISH)** — DURATION: 6 MONTHS

**4. SHORT HAND AND TYPING (TAMIL)** — DURATION: 6 MONTHS

**5. GENERAL MOTOR MECHANISAM** — DURATION: 6 MONTHS

**6. GENERAL ELECTRICIAN**
(WIRING & WINDING) — DURATION: 6 MONTHS

**7. RADIO & T.V REPAIRING** — DURATION: 8 MONTHS

**8. LATHE MACHINE OPERATION** — DURATION: 3 MONTHS

**9. ARC WELDING** — DURATION: 3 MONTHS

**10. CARPENTRY**
(WITH USE OF MACHINARY) — DURATION: 6 MONTHS

**11. REFRIGERATION AND AIR CONDITIONING** — DURATION: 6 MONTHS
(8,9,10 பயிற்சி நெறிகளுக்கு ON THE JOB TRAINING வழங்கப்படும்)

**NOTE:-**

1. பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2001
### FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE

2001 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதனை சகல வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் மோட்டார் சைக்கிள்களுக்கான ENGIN NO பொறித்துக்கொடுக்கப்படும்.

### PRODUCTION AND REPAIRING ON ORDER...!
#### கட்டமைத்தலும் திருத்துதலும்

சகல விதமான இரும்பு சார் உற்பத்திப் பொருள்களும் ஒட்டு வேலைகளும் மரத் தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும். அத்துடன் FRIDGE, WATERPUMPS, ELECTRICAL பொருள்கள் சம்பந்தமான சகல வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:-

**REGISTRAR,**
**PATRICIAN INSTITUTES**
59, ST.PATRICK'S ROAD,
JAFFNA.

(C/15863)

---

## நிக்சன் அதிர்ஷ்ட முதலீட்டுத் திட்டம்

நண்பர்களுக்கு மட்டும்

மாதாந்தக் கட்டுப் பணம் ரூபா 500/=. மாதம் மாதம் 15 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 25000/= உடன் வழங்கப்படும்.
அதிர்ஷ்டத்தின் பின்னர் பணம் கட்டத் தேவையில்லை.
மேலும் (இலவசமாக) 25 பேருக்கு சிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
எதிர்வரும் 25.03.2001ஆம் திகதிக்கு முன்பு பணத்தைக் கட்டிப் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளவும்.
மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

### நிக்சன் பல்பொருள் வாணிபம்

(பஸ்நிலையம் முன்பாக)
அச்சுவேலி.
(C/15772)

---

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
## HAPPY BIRTHDAY



### தர்மலிங்கம் ஜனகன்

கைதடியைச் சேர்ந்த திரு. திருமதி
தர்மலிங்கம் (அருள்)-கனகராணி (ராணி) தம்பதிகளின்
செல்வப் புதல்வன் ஜனகன்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் உள்ள தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார். ஜனகனை அன்பு அப்பா, அம்மா, அக்கா ஷாமினி, அம்மம்மா, பாட்டி, அப்பப்பா, பெரிய மாமா குடும்பம், இந்திரன் சித்தப்பா குடும்பம், சுதன் சித்தப்பா குடும்பம், ராமன் சித்தப்பா குடும்பம், கனடா ஜயன் சித்தப்பா குடும்பம், சுவிஸ் குணம் சித்தப்பா குடும்பம், லண்டன் சுரேஸ் சித்தப்பா, ஜீவா அன்ரி, சுவிஸ் மாகன் சித்தப்பா, முகுந்தன் மாமா, அத்தை மாமா, கிருபா அன்ரி, ராசாத்தி அன்ரி, சாளன் அண்ணா, அபி அக்கா, கௌதமன் அண்ணா, சௌவுத்தி மச்சாள், கொவர்ந்தனன் மச்சான் ஆகிய அனைவரும் எல்லா நலமும் பெற்றுப் பல்கலையும் கற்றுச் சிறப்புடன் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
*க.கமலம்,*
*கைதடி.*
சுரேஸ் சித்தப்பா, ஜீவா அன்ரி.
(லண்டன்)
(85735)

---

## சேவை நலன் பாராட்டி
## வாழ்த்துகின்றோம்



### திரு.செல்லத்துரை செல்வச்சந்திரன்

(கிராம அலுவலர், கோப்பாய்)

கடந்த 13 வருடங்களாகக் கோப்பாய் வடக்கில் கிராம அலுவலராக சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற சேவையாளனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கோப்பாய் வடக்கு, மத்தி மக்கள்.*

இன்று பி.பகல் 3.00 மணிக்கு சேவைநலன் பாராட்டுவிழா யா/ கோப்பாய் சரவணபவானந்தா பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் வரவேற்கப்படுகின்றார்கள்.

*விளம்பர அன்பளிப்பு:*

### ஜெயா மோட்டர்ஸ்

(85760) *பிரதேச செயலகம் முன்பாக - கோப்பாய்.*

# யாழ். பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிக்கும் ராணுவச் செயற்பாடுகள்

## சமூகவியல் சமூகம் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.பல்கலைக்கழக செயற்பாட்டிற்கும், மாணவர் நலனுக்கும் ஊறு விளைவிக்கும் இராணுவ செயற்பாடுகளுக்கு யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சமூகவியல் சமூகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த செவ்வாயன்று காலை 10 மணியளவில் ஆரியகுளம் சந்தியில் வைத்து விசாரணையென்று அழைத்துச் செல்லப்பட்ட சமூகவியல் சமூக உறுப்பினர் ம.மதனமோகன் அன்று மதியம் நடந்த பரீட்சையிலும் தோற்ற முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளார். 15 நிமிடத்தில் விடுவதாக கூட்டிச் சென்று இரவு 7 மணிவரை தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்டும் உள்ளார். பரீட்சை பற்றி கூறியபோது 'உங்களுக்கு ஏன் பரீட்சை' என கூறப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் கைது தொடர்பாக, வழிப்போக்கர் ஒருவர் மூலம் கிடைத்த தகவலையடுத்து பதில் துணைவேந்தர் யாழ்ப்பாண இராணுவ தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது 'அப்படி ஏதும் கைது நடக்கவில்லை' என்பதே பதிலாக கிடைத்தது. யாழ்.மனித உரிமைகள் அலுவலகப் பதிலும் அதுவாகவே இருந்தது.

இராணுவத்தின் இத்தகு நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் இனியும் தொடராதிருக்க பல்கலைக்கழக நிர்வாகமும், ஏனைய சிவில் நிர்வாக அதிகாரிகளும் வழிகாண வேண்டும்.

இயல்பான சமாதான வாழ்வினை நோக்கிய இன்றைய நகர்வுகளை குழப்பும் சதி முயற்சிகளாக இவை வளர்ந்துவிடாதிருக்க, இந்த விடயம் தொடர்பாக, சமூகத் தலைவர்களும், சமூகப் பொறுப்புள்ளவர்களும் விழிப புணர்வுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தம் தரவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5-6)

### ஜீ.சீ.ஈ. சாதாரணதர, உயர்தர

# தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு இனிமேல் தனியான பரீட்சை

கொழும்பு,மார்ச்,25

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளை இனிவரும் காலங்களில் பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு வேறாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வேறாகவும் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஏ.எம்.ஆர்.பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் வெவ்வேறான வினாத்தாள்களும் தயாரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மீரிகம,ஹாப்பிட்டிகம கல்விக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். 10ஆம் தரத்துக்கான புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கமைய கணிப்பீட்டுக் கருவிகளை தயாரிப்பது தொடர்பாக இக்கருத்தரங்கு நடைபெற்றது.

அகில இலங்கை ரீதியில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில முதன்முறையாக இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. (க)

# விடுதலை இலட்சியத்துடன் போராடும் புலிகளை தலிபானுடன் ஒப்பிட முடியாது

## மாகாண சபைக் கூட்டத்தில் விக்கிரமபாகு

கொழும்பு,மார்ச்25

விடுதலைப் புலிகள் தமது இனத்துக்காகப் போராடி வருகின்றனர். அவர்கள் விடுதலைப் போராளிகள். அவர்களை தலிபான் இயக்கத்துடன் ஒப்பிட முடியாது என்று நவசமசமாஜக் கட்சியின் செயலாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

மேல் மாகாணசபைக் கூட்டத்தில் தலிபானில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரேரணை ஒன்று செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்ட போது உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டம் சபைப் பிரதித்தலைவர் ஜகத் அங்கதே தலைமையில் சவ் சிறிபாய மண்டபத்தில் நடைபெற்றது.

விக்கிரமபாகு கருணாரத்ன அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

விடுதலைப் புலிகள் ஆயுதம் தாங்கியிருப்பதால் மட்டும் அவர்களை தலிபானிய இயக்கத்துடன் ஒப்பிட முடியாது. புலிகள் இலட்சியத்துக்காகப் போராடி வருகின்றனர் அவர்கள் விடுதலைப் போராளிகள் என்றார்.

இந்தப் பிரேரணையை சமர்ப்பித்த ஆளும் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி ஆகியவற்றின் உறுப்பினர்கள் புலிகள் இயக்கமும், தலிபான் இயக்கமும் ஒரே வகையானவை என்று தெரிவித்தனர்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் மாகாணசபை உறுப்பினருமான மனோ கணேசன் அங்கு உரையாற்றுகையில் -

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்களினால் புராதன சிறப்புமிக்க பாமியன் சிலைகள் நிர்மூலமாக்கப்படுவதை கண்டிப்பவர்கள் நம் நாட்டு இந்துக்களின் பாரம்பரிய சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய புனித ஈஸ்வர ஆலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அட்டூழியங்களை முதலில் கண்டிக்க வேண்டும். இந்து ஆலயங்களின் சிற்பங்களும், புராதன சின்னங்களும் களவாடப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் - என்றார். (க)

## அனுராதபுரம் நீதிமன்றில் செலுத்திய

# பிணைப் பணத்தை இங்கு பெறுவதற்கு நடவடிக்கை

அனுராதபுரம் நீதிமன்றில் செலுத்திய பிணைப் பணத்தை யாழ்.நீதிவான் நீதிமன்றில் மீளப்பெற்றுக் கொள்வதற்காக யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

குடாநாட்டில் இருந்து அனுராதபுரம் நீதிமன்றுக்குச் செல்வதில் உள்ள போக்குவரத்து பிரச்சினைகளை அனுராதபுரம் நீதிமன்ற பதிவாளருக்கும் உரிய அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறி கட்டிய பிணைப் பணத்தை குடாநாட்டி லேயே மீளப்பெற வசதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

கட்டிய பிணைப்பணத்தை மீளப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினரின் பிணைப் பணம் யாழ்.நீதிவான் நீதிமன்றுக்கு வந்துள்ளதால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்தப் பணம் மீள வழங்கப்பட்டு வருகின்றது.

இதனிடையில் யாழ்.நீதிவான் நீதிமன்றில் கடந்த வருடம் டிசெம்பர் வரையான காலப் பகுதியில் பொது மக்கள் கட்டிய பிணைப்பணம் 12 லட்சம் ரூபா மீள வழங்கப்பட்டுவிட்டது.

இவ்வருடம் தைமாதம் தொடக்கம் பிணைப்பணத்தை கட்டியவர்களில் மீளப்பெற விண்ணப்பித்தவர்களுக்கும் மிக விரைவில் வழங்கப்படும் என்றும் கொழும்பில் இருந்து பிணைப் பணம் எடுத்துவரப்பட்டதும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் பதிவாளர் செல்வி மீரா தெரிவித்தார். (க-6-5)

### நாகர்கோயிலில் சிப்பாய் காயம்

கொழும்பு,மார்ச்25

நாகர்கோயில் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் வியாழக்கிழமை மாலை மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அரியாலை கிழக்கு, மட்டுவில் தெற்குப் பகுதிகளில் படையினர் மேற்கொண்ட தேடுதலில் ரி81 ரக மோட்டார் குண்டுகள் இரண்டையும் கைக்குண்டு ஒன்றையும் படையினர் மீட்டுள்ளதாகவும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (ஐ-3)

### 65 படையினர் கைது

கொழும்பு,மார்ச்25

படைகளிலிருந்து தப்பிச் சென்ற 65 பேர் குருநாகல் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களிடமிருந்து 18 நவீனரகத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டிருப்பதாகவும் நிக்கவரெட்டிய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றைச் சேர்ந்த இவர்களை மீண்டும் படைகளில் இணைத்துக்கொள்வதற்கு முன்னர், சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

### நல்லை ஆதீன குருமுதல்வர் குருபூஜை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 20 ஆவது ஆண்டு குருபூஜை ஆராதனைவிழா ஏப்ரல் முதலாம் திகதி ஞாயிற்று கிழமை நடைபெறவுள்ளது.

குருபூஜையை முன்னிட்டு அன்றைய தினம் அகில இலங்கை திருமுறை மன்றத்தின் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கு மற்றும் கந்தபுராணபடனமும் நடைபெறும். (க-3)

# அரசு சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வெளிநாடுகள் அழுத்தம் தர வேண்டும்

## நெதர்லாந்து தூதரக அதிகாரியிடம் கோரிக்கை

யாழப்பாணம்,மார்ச்25

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பை அரசு தரப்பும் ஏற்றுக் கொண்டு யுத்தநிறுத்தத்தினை கடைப்பிடித்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வகையில் வெளிநாட்டு தூதரகங்கள் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதரக இரண்டாவது செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நெதர்லாந்து தூதரக செயலாளர் செல்வி றிங்கி ரோகல் தலைமையிலான குழுவினர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பு யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இணைய பிரதிநிதிகளினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

இலங்கைக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் சுதந்திரத்துக்கு பின்னர் தமிழ் மக்கள் கௌரவத்துடனும், சுதந்திரத்துடனும் வாழ முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசமைப்பில் சிறுபான்மையினருக்கு இருந்த பாதுகாப்பு சரத்துக்கள் கூட விலக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழிக்கு தற்பொழுது சம அந்தஸ்து வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும் நடைமுறையில் இன்னும் முழுமையாக அமுல் செய்யப்படவில்லை.

இலங்கையின் அரசமைப்பில் தமிழர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும். தமிழ்மக்கள் தங்கள் அபிலாசைகளை பூர்த்தி செய்து சுய கௌரவத்துடன் வாழக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

### சர்வதேச சமூகம் தாராளமாக உதவும்

இச்சந்திப்பில் நெதர்லாந்து தூதரக அதிகாரி தெரிவிக்கையில் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால் சர்வதேச சமூகம் தாராளமாக உதவிகளை வழங்கும் என்று கூறினார்.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை இடம்பெற்ற இச் சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் புனர்வாழ்வு திட்டங்களிலுள்ள குறைபாடுகள் மற்றும் முன்னேற்றங்கள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் நெதர்லாந்து அதிகாரி கேட்டறிந்து கொண்டார்.

நெதர்லாந்து அதிகாரியுடன் கெயா நிறுவனத்தைச் சேர்ந்த கிறிஸ்ரியன் பாபரோ, செல்வி குளோழியா இபாயேயூ ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (க-5-10)

# வன்னிக்கான 'பாஸ்' முறை ரத்துச் செய்யப்படமாட்டாது

## இலகுபடுத்த நடவடிக்கை என்கிறார் ரத்வத்தை

கொழும்பு,மார்ச்25

கொழும்பில் குண்டு வைப்பதற்குப் புலிகள் வவுனியாவிலிருந்தே ஆயத்தமாவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே வன்னியில் 'பாஸ்' நடைமுறைப்படுத்தப்படுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் 'பாஸ்' முறையை ரத்துச் செய்யமாட்டோம். ஆனால் ஓரளவு அதனை இலகுபடுத்தும் வகையில் அதில் மாற்றங்களைச் செய்வோம். இதற்கான ஆலோசனை இராணுவ அதிகாரிகளுடன் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை வெள்ளிக் கிழமை மாலை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளையில் வன்னி மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தகுமார் புஞ்சிஹேவா வன்னியில் 'பாஸ்' முறையால் மக்கள் படும் அவதிகள் குறித்துச் சபையில் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது-

வன்னி மாவட்ட எம்.பியின் கருத்துக்களை நான் மதிக்கின்றேன். வன்னிக்கான 'பாஸ்' முறையால் இப்போது பயங்கரவாத நடவடிக்கைகள் ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. 'பாஸ்' முறையை ரத்துச் செய்து பின்னர் குண்டுகள் வெடித்தால் உறுப்பினர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வாரா?

மக்களை கஷ்டத்தில் தள்ளி அவர்களுக்குத் தொல்லை கொடுக்க அரசு விரும்பவில்லை. மக்களைப் பாதுகாப்பதற்காகவே இந்தப் 'பாஸ்' முறையை அமுல் நடத்துகிறது.

இந்தப் 'பாஸ்' நடைமுறையை முதலாம் திகதி முதல் இலகுபடுத்துவதற்கான இராணுவ ஆலோசனைக் கூட்டம் 26 ஆம் திகதி வவுனியா படை அதிகாரிகளுடன் இராணுவ முகாமில் நடைபெறும். உறுப்பினர் விரும்பினால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான ஒழுங்குகளை நான் செய்து தருவேன் - என்றார். (க)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 22 ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (132417ஏ) | (132417பி) | (179847ஏ) |
| (180311பி) | (180311சி) | (180311டி) |
| (180311ஈ) | (180311எவ்) | (180311ஜி) |
| (181763ஏ) | (181763பி) | (184394ஏ) |
| (184639ஏ) | (184639பி) | (184639சி) |
| (184737ஏ) | (184866ஏ) | (184806பி) |
| (184808ஏ) | (184812ஏ) | (184812பி) |
| (185891ஏ) | (185936ஏ) | (185958ஏ) |
| (185959ஏ) | (185959பி) | (185959சி) |
| (185960ஏ) | (186055ஏ) | (186057ஏ) |
| (186057பி) | (186057சி) | (186068ஏ) |
| (186101ஏ) | (186101பி) | (186103ஏ) |
| (186113ஏ) | (186130ஏ) | (186139ஏ) |
| (186139பி) | (186139சி) | (186166ஏ) |
| (186173ஏ) | (186178ஏ) | (186285ஏ) |
| (186320ஏ) | (186933ஏ) | (188017ஏ) |
| (188729ஏ) | (188729பி) | (188824ஏ) |
| (188851ஏ) | (188863ஏ) | (188864ஏ) |
| (188865ஏ) | (188905ஏ) | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (166200ஏ) | (166200பி) | (185973ஏ) |
| (185973பி) | (185973சி) | (186024ஏ) |
| (186172ஏ) | | |

இம்மாதம் 23ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (180171ஏ) | (180171பி) | (180210ஏ) |
| (180210பி) | (181861ஏ) | (184420ஏ) |
| (184420பி) | (184420சி) | (184540ஏ) |
| (184581ஏ) | (184625ஏ) | (185354ஏ) |
| (185854பி) | (185873ஏ) | (185954ஏ) |
| (185954பி) | (186014ஏ) | (186014பி) |
| (186014சி) | (186014டி) | (186014ஈ) |
| (186014எவ்) | (186014ஜி) | (186080ஏ) |
| (186080பி) | (186109ஏ) | (186109பி) |
| (186109சி) | (186109டி) | (186137ஏ) |
| (186137பி) | (186137சி) | (186137டி) |
| (186140ஏ) | (186144ஏ) | (186164ஏ) |
| (186164பி) | (186164சி) | (186165ஏ) |
| (186174ஏ) | (186174பி) | (186174சி) |
| (186312ஏ) | | |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (163773ஏ) | (163773பி) | (180940ஏ) |
| (180940பி) | (180940சி) | (182881ஏ) |
| (182881பி) | (182986ஏ) | (182986பி) |
| (182999ஏ) | (184118ஏ) | (184118பி) |
| (184118சி) | (184118டி) | (185562ஏ) |
| (184518ஏ) | (184518பி) | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (177191ஏ) | (177199ஏ) | (168934ஏ) |
| (181881ஏ) | (181998ஏ) | (181998பி) |
| (181998சி) | (181998டி) | (184704ஏ) |
| (184704பி) | (186031ஏ) | (186031பி) |
| (186006ஏ) | (186074ஏ) | (186293ஏ) |
| (188922ஏ) | (188922பி) | (188922சி) |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (184161ஏ) | (184161பி) | |

(க-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## படிவம்

க.பொ.த. (சா.த.) பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான படிவம் விற்பனையாகின்றது. விலை ரூபா 2/- நாயகபாலன், மானிப்பாய். (85779)

## திருமண சேவை

36 வயதுடைய, சித்திரை நட்சத்திரம், கிரகபாவம் 35 3/4, ஆங்கில பயிறப்பட்ட ஆசிரியருக்கு உடன மணமகள தேவை. அத்துடன் கிறிஸ்தவ மணமக்களும் உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: கு.திருவிளங்கம், 3ஆம் கட்டையடி, வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காடு.

(85756)

## NEW MATHS

36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆண்டு 6 இலிருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தின் சகல அலகுகளையும் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகம், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

(85656)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம், பல வருட அனுபவமும், பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மிகச் சிறப்பாகக் குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். திங்கள், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் 3 மணிக்குப்பின் சந்திக்கலாம். R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey) Dip. IN - Ed., 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(85818)

## பொய்யாமொழி ஜோதிடம்

விவாகத்தடை, கல்வித்தடை, தொழில்தடை நீங்குவதற்கு ஆலோசனை வழங்கப்படும். செவ்வாய், சனிக்கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயிலடி நல்லூரிலும், ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம்.

(85812)

## தவறிவிட்டது

கடந்த (21-03-2001) புதன் கிழமை திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது (City of Trinco கப்பலில்) காங்கேசன்துறைப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கிடையில் நடேஸ்வராக் கல்லூரிக்குரிய Badge (சின்னம்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரஞ்சனாஸ் புடைவையகம், சுன்னாகம் அல்லது நடேஸ்வரக் கல்லூரி, கந்தரோடை (ஸ்கந்தவரோதயக் கல்லூரியருகில்) சுன்னாகத்தில் தயவு செய்து ஒப்படைத்துதவவும்.

(85811)

குப்பிளான் சந்தி, ஏழாலையைச் சேர்ந்த வி.செல்லையா என்பவருடைய விசேட அடையாள அட்டையும் (இல.0906003733), செ.பூரணம் என்பவருடைய தேசிய அ.அட்டையும் (இல.437040079V), விசேட அ.அட்டையும் (இல.0906003734) ஓட்டுமடத்துக்கும் ஸ்ரான்லி வீதி RAAN அலுவலகத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 22, மானிப்பாய் வீதி, மேகாஸ் வீடியோவில் ஒப்படைத்துதவவும்; சன்மானம் வழங்கப்படும்.

(85829)

## வீடு விற்பனைக்கு

305/1, ஸ்ரான்லி வீதியில் விக்னா ரியூட்டறிக்கு முன்பாக 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த 5 அறைகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. கடைகள் கட்டுவதற்கு மிகவும் உகந்த இடம் தொடர்பு: தம்பிஜயா, 62/02, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (85679)

கோப்பாய் மத்தியில் பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் கிளுவானை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் வெளிநாட்டுப் பாணியில் அமைக்கப்பெற்ற குளியலறை, நல்லதண்ணீர் கொண்ட "லக்ஷ்மி வாசா" வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராசா, மாரியம்மன் நாவலடி, கோப்பாய். (85871)

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, டச் றோட்டில் நெல்.பர.108 குழி 2 எனும் நெற்காணி விற்பனைக்கு உண்டு. குடியிருப்புக்கும் உபயோகிக்கலாம். ஒன்றாக அல்லது பகுதியாகவும் விற்கப்படும். தோடர்பு: சி.செல்லையா, 15, முருகமூர்த்தி றோட், வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம். (85323)

## உடன் விற்பனைக்கு

மீன்களுடன் மீன்தொட்டி, பெரிய குத்துவிளக்கு மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு: றிக்கோ பத்மநாதன், 22/3 A, விதானையார் வீதி, சுண்டுக்குளி. (85765)

## விற்பனைக்கு

22G தரமான சில்வர் தகடுகள் 8'x4', 8'x3' (எட்டு அடி நீளம், அகலம் நாலு அடி, மூன்று அடி) எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் இல. 2052. (85776)

பதிவு செய்யப்படாத K 600 மொடல் குபேட்டா லான்ட் மாஸ்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பத்தி. (85784)

ஸ்ரீ - 10 மொறீஸ் ஒக்ஸ்போட் - கார், 14 ஸ்ரீ 6303 நிசான் சனி வக்கன், புதிய பழைய ஆட்டோக்கள், M.D - 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராசா மாரியம்மன் மோட்டோஸ், நாவலடி, கோப்பாய். (85782)

NATIONAL REFRIGERATOR-MADE IN JAPAN, FLAT BACK, NO FROST விற்பனைக்குண்டு தொடர்பு: கா. செல்வரத்தினம் (நில அளவையாளர்), சம்பந்தர் பிள்ளையார் கோயில் வீதி, ஆனைக்கோட்டை. (85728)

150 LF வான் கொம்பிறேசர் வாத்து, டிபிறிச் என்ஜின் அத்துடன் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு- ரவி, K.K.S. வீதி, சுன்னாகம். (85664)

பத்து மாதம் நிரம்பிய அல்சேசன் ஆண்நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு.ஜயாத்துரை, மகன் சிறி, எம்.எஸ்.லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (85777)

## கடை விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு கிழக்கில் கடையுடன் சேர்ந்து அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (இராசாத்தி கடை, பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) தொடர்பு- தே.பிரதீபன், கலைவாணி லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (85659)


## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 334, K.K.S. வீதி வீட்டில் (குணம் றொட்டிக் கடைக்கு அருகில்); சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம். (85830).

இறைச்சிக்கோழி புறொயிலர், கல்பேட் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (85824)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.வ.த.திருநாவுக்கரசு

S.L.P.S. 2-1., Eng.Spl.Trd.

(அதிபர் - கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை)

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2-1 க்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன், மேன்மேலும் சிறப்புற வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை.

(85800)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 - 10 - 1921 |  | 23 - 02 - 2001 |

### அமரர் மருதப்பு கனகரெத்தினம்

கண்ணை இமை காப்பதுபோல் எமைக்
காத்து நின்றீரே - அப்பா!
காலமெல்லாம் தரணியில் தலை நிமிர்ந்து நாம்
வாழ வழி அமைத்தீரே - அப்பா!
கண்மூடித் திறப்பதற்குள் எங்கு தான்
சென்றீரோ? - அப்பா!
அன்புத் தந்தையே! எமக்கு ஆறுதல் யாரோ?
ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

-மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(85827)

---



காரைநகர் - கருங்காலி (கேசடை)

## அருள்மிகு பெரியதம்பிரான் ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

26-03-2001 திங்கட்கிழமை

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 13 ஆம் நாள் நாளை (26-03-2001) திங்கட்கிழமை ரேவதி நடசத்திரமும் பிரதமைத் திதியும் கூடிய சித்த யோக மீனலக்கின சுப வேளையாகிய காலை 6.15 மணிமுதல் 7.11 மணி வரையுள்ள முகூர்த்தத்தில் விநாயகர், சுப்பிரமணியர், பைரவர் சகித பெரிய நாயகி அம்பாள் சமேத பெரியதம்பிரான் பெருமானுக்கு ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. அத்தருணமும் அதனைத் தொடர்ந்து பன்னிரு நாள்கள் நடைபெறும் விழாக்களிலும் 13 ஆம் நாள் (07-04-2001) சனிக்கிழமை மண்டலாபிஷேகம் நிகழவிருக்கும் வைபவத்திலும் கலந்து கொண்டு பெரியதம்பிரானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அடியார்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சிவம்

(85814) - பெரியதம்பிரான் தொண்டர்கள்.

---

## எமது வாடிக்கையாளர்களே!

இதுவரை நாளும் திருநெல்வேலியில் இயங்கி வந்த

### வீ.எம்.கே.ஜுவல்லர்ஸ்

சாவகச்சேரி

என்ற எமது ஸ்தாபனம் தற்போது
இல. 96/1 கஸ்தூரியார் வீதியிலுள்ள

### அருள்முருகன் ஜுவலர்ஸ்

(தற்போதைய சாவகச்சேரி மக்கள் வங்கிக்கு முன்பாக)

ஸ்தாபனத்தில்

நாளை (26-03-2001) திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக இயங்கவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

(85820) வீ.எம்.கே.ஸ்தாபனத்தினர்.

---

## நினைவஞ்சலி

24-02-2001 நாவலர் சனசமூக நிலையப் பொன்விழாவின் போது மைதானத்தில் சிவபதம் எய்திய

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 03 - 02 - 1950 |  | 24 - 02 - 2001 |

### திருமதி இராசன் மலர்

விஞ்சிய பாசத்தை வைத்திருந்தாய் - எம்மில்!
விதியெம்மைப் பிரித்ததுவோ - என்
ஆருயிர் மைத்துனியே?
கன்னங்கள் தித்திக்கக் கொஞ்சிடும் - அத்தையே!
காணாமற் போன தெங்கே?

"இன்ப பவனம்"
நாவலடி, உடுப்பிட்டி.

மு. சூரசங்காரம் (சூரன்)
(குடும்பத்தினர்)

(85773)

---

## மாபெரும் மலிவு விற்பனை!

புத்தாண்டை முன்னிட்டு அனைத்து புடைவை ரகங்களும் உங்கள் மனம் போல் தெரிவு செய்து மலிவுவிலையில் பெற்றுக் கொள்ளலாம்.

### விநாயகர் புடைவையகம்

இல.63 A, 62 A,61, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

# பொதுஜன முன்னணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் அனுரா!

## சபையில் அமைச்சர் ஜெயராஜ் தகவல்

கொழும்பு, மார்ச் 25
பொதுஜன ஐக்கிய முன்னணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் அனுரா பண்டாரநாயக்கா தான். ஐ. தே. க.வினர் தமது அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று கூறுவார்களா?

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே வெள்ளிக்கிழமை மாலை நாடாளுமன்றத்தில் ஐ. தே. க. எம். பிக்களைப் பார்த்து இவ்வாறு சவால் விடுத்தார்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு (குழுநிலை) விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ. தே. க. தலைவர்கள் பலர் கொல்லப்பட்டதைப் போன்றே, அரச தலைவர்களும் கொல்லப்படுவதை எதிரணியினர் விரும்புகிறார்கள். அதனாலேயே ஜனாதிபதி மாளிகை நிர்மாணிக்கப்படுவதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

அரசு 10 தேர்தல்களில் வென்றுள்ளது. தோல்வியால் ஐ. தே. க.வினர் தலைகீழாக இன்று நிற்கின்றனர். விவாதம் நடைபெறுவது என்ன விடயத்திற்கு என்று தெரியாமலேயே ஐ. தே. க. வினர் பேசுகின்றனர். அரசின் மீதும், ஜனாதிபதி மீதும் சேறு பூசுகின்றனர்—என்றார்.

(க)

## பண்ணிசைப் போட்டி-2001 ஒத்திவைக்கப்பட்டுள்ளது

2001 ஆம் ஆண்டு பாடசாலை முதலாந்தவணை விடுமுறைக் காலத்தில் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக நடத்தப்படவிருந்த 03 பிரிவுகளைக் கொண்ட பண்ணிசைப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தலைவர்,
சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(கி/15880)

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில்
கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி பிரதாபராஜன் குணரஞ்சிதம்
அவர்களின்
(மாசார், கிளாலி கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்)
ஏக புத்திரியான

**செல்வி பி. சரண்ஜா**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் வாடும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி மறைந்த செல்வி சரண்ஜாவுக்கு கண்ணீரைக் காணிக்கையாக்கி அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்,
பளை.

(85826)

## வலி. கிழக்கு பிரதேச சபை. நீர்வேலி விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோருதல்

வலி. கிழக்கு பிரதேச சபையால், நடத்தப்படும் பின்வரும் விளையாட்டுப் போட்டிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. மரதன் ஓட்டம்:**
ஆண், பெண் (எமது எல்லைக்குட்பட்டவர்கள்)
அனுமதிக் கட்டணம் — ரூபா 10.00

**2. சைக்கிள் ஓட்டப்போட்டி:**
ஆண், பெண் (மாவட்ட ரீதியில்)
அனுமதிக்கட்டணம் — ரூபா 25.00

**3. மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி:**
(மாவட்ட ரீதியில்)
அனுமதிக்கட்டணம் — ரூபா 100.00

மேற்படி போட்டிகள் 12-04-2001 ஆம் திகதியன்று இடம்பெறும்.

கிரிக்கெட் (மென்பந்து), வலைப்பந்து, உதைபந்து, எல்லே, தாச்சி, கரபந்து ஆகிய விளையாட்டுக்களும் இடம்பெறவுள்ளன. மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பங்களை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி 04 04 2001**

மேலதிக விவரங்களுக்கு வலி. கிழக்கு பிரதேச சபையில் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. பூ. குணசிங்கம்,
(ஜே. பி. யு. எம்),
தவிசாளர்,

வலி. கிழக்கு பிரதேச சபையும்,
விளையாட்டுக் குழுவும்

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
23.03.2001

(சி/15883)

## மின்சார சபைக்கு எதிராக வழக்கு

கொழும்பு, மார்ச் 25
மின் கட்டணத்தை மேலும் 25 சதவீதத்தால் உயர்த்தியது நியாயமற்றது எனக் கூறி மின்சார சபைக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எரிபொருள் கட்டணம் உயர்வடைந்துள்ளதைக் காரணம் காட்டி மின்சார சபை மின் கட்டணத்தை அண்மையில் 25 சதவீதம் உயர்த்தியது. (ம—6)

## கிராம அலுவலர் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 25
கிராம அலுவலர்களுக்கான அதி சிறப்புத் தரத்துக்கான பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

[க-10]

## பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
நாரந்தனை—சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பாலஸ்தாபனம் நாளை திங்கட்கிழமை காலை 7 மணியளவில் நடைபெறும்.

(ம—173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 25
பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்வுக்கு முன்னர் தையல் பயிற்சி, தட்டச்சுப் பயிற்சி, தும்புப் பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு புலோலியில் இயங்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிகளைப் பெற்றவர்களும், இடம்பெயர்வால் பயிற்சியை இடையில் நிறுத்தியவர்களும், இவ்வருடம் தும்புப் பயிற்சிபெற ஆர்வம் உள்ளவர்களும் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு பளைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (க)

## ஊர்காவற்றுறையில் குளங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை

ஊர்காவற்றுறை, மார்ச் 25
ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 'கெயர்' நிறுவனத்தின் உதவியுடன் குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய ஊர்காவற்றுறையில் இரண்டு குளங்களும், காரைநகரில் இரண்டு குளங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

காரைநகரிலுள்ள கைலாய குளத்தை புனரமைக்க ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், வேம்படிக் குளம் புனரமைப்புச் செய்வதற்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்றுறையிலுள்ள அறணை வண்ணாங்குளம் புனரமைப்புக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும்,

இவற்றுடன் இணைத்து சுடுவில் வண்ணாங்குளத்தை புனரமைப்பு செய்வதற்குரிய மதிப்பீட்டுத்திட்ட வேலைகள் நடைபெற்றுவருவதாகவும்—

ஊர்காவற்றுறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ. குமாரசாமி சர்மா தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக இப்பகுதியிலுள்ள குளங்கள் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாத நிலையில் தூர்ந்து போயுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ம-16)

## உடுப்பிட்டியில் கலை நிகழ்ச்சி

சாவகச்சேரி, மார்ச் 25
உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க நுண்கலை மன்றத்தின் கலை நிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி அரங்கில் டாக்டர் மு தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச. சண்முகசுந்தரம் கலந்து கொள்வார்.

(க-31)

## சைவ சமய உயர் தகைமைத் தேர்வுப் போட்டி

சைவ சமயத்தை விரிவடையச் செய்யும் வண்ணம் எதிர்வரும் சித்திரை மாதம் சமய அறிவுப் போட்டி ஒன்றினை நடத்த உள்ளோம்.

### போட்டி விவரம்

★ இதில் எவரும் பங்கு பற்றலாம்; வயதுக்கட்டுப்பாடு இல்லை.

★ நூறு நிமிடத்தில் நூறு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

★ வினாக்கள் சித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள், புராணங்கள், விக்கிரம, வருஷம், சைவநீதி ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும்.

★ யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கொட்டகலை, மாத்தனை ஆகிய இடங்களில் சமகாலத்தில் தேர்வுகள் நடைபெறும். மேலே குறிப்பிடப்படாத இடங்களில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்தால் அவ்விடத்தில் தேர்வு நடத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

முதலாம் பரிசு — **தங்கப் பதக்கம்**
இரண்டாம் பரிசு — **வெள்ளிப் பதக்கம்**
மூன்றாம் பரிசு — **வெண்கலப் பதக்கம்**

★ ஐந்து ஆறுதல் பரிசுகளும் ஐம்பது புள்ளிகளுக்கு மேற் பெறுபேறு பெறுவோருக்குச் சான்றிதழும் வழங்கப்படும்.

★ கீழே காணப்படும் மாதிரி விண்ணப்பத்திற்கு அமையத் தாமே விண்ணப்பப் படிவத்தை 29 செ. மீ X 21 செ. மீ. அளவான காகிதத்தில் வடிவமைத்து 31 - 03 - 2001 இற்கு முன்னர் கைக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

★ விண்ணப்பத்துடன் சுயமுகவரியை எழுதிய, ரூபா 3.50 முத்திரை ஒட்டிய ஒரு கடிதத்தில் சைவநீதி என்ற பெயருக்கு மணிமலர் முகவர், தபாலகம், கொழும்பு - 13, தபாற்கந்தோரில் மாற்றக் கூடியதாக ரூபா 25/- பெறுமதியாகக் காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையை அனுப்பவேண்டும்.

★ விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: —
**மக்மிலன் புத்தகசாலை,**
3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம.

### சைவசமய உயர் தகைமை தேர்வுப் போட்டி

**விண்ணப்பப் படிவம்**

பெயர்:- ....................................................
முகவரி:- ....................................................
....................................................
தேர்வுக்குத் தோற்ற விரும்பும் இடம்:- ....................
....................................................
தொழில்:- ....................................................
பிறந்த திகதி:- ....................................................

.................... ....................
திகதி கையொப்பம்.

★ போட்டி 22.04-2001 ஞாயிறு அன்று நடைபெறும்.

(சி/15885)

## நிவாரண விநியோகத்துக்கென

# தரமற்ற அரிசி வழங்கப்பட்டால் ப. நோ. கூ. சங்கங்கள் ஏற்கமாட்டா

யாழ்ப்பாணம், மார்ச் 25

நிவாரண விநியோகத்திற்காக வழங்கப்படும் அரிசி தரமற்றதாக இருந்தால் ப.நோ. கூ. சங்கங்கள் அவற்றை மக்களுக்கு விநியோகிப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் மற்றும் பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இம்மாநாடு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். ப.நோ.கூ சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உலர்உணவு நிவாரண விநியோகம் உட்பட பல விடயங்கள் தொடர்பாக இம்மாநாட்டில் ஆராயப்பட்டது.

நிவாரண விநியோகத்திற்காகக் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு தொகுதி அரிசி மனித பாவனைக்கு உதவாது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டபோதும், அந்த அரிசி யாழ்ப்பாணத்துக்குப் பொருள்கள் அனுப்பும் விநியோகஸ்தர் ஒருவரினால் கொள்வனவு செய்யப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது எனவே அடுத்த நிவாரணத்துக்கான அரிசியை பெறும் போது ப. நோ. கூ. சங்கங்கள் இது விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் இம் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

கொழும்பிலிருந்து கப்பலில் கொண்டு வரப்படும் அரிசியை பருத்தித்துறையில் வைத்து சோதனை செய்வதற்கு யாழ். அரசாங்க அதிபர் ஒழுங்குகளை மேற்கொண்டிருப்பது தெரிந்ததே.

(உ—5)

## மெய்வன்மைப் போட்டிகள்

சுன்னாகம், மார்ச் 25

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முருகமூர்த்தி கோயில் மைதானத்தில், அதிபர் கணேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் கலந்து கொள்வார். (க-27)

★ ★ ★

பருத்தித்துறை மாதனை மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30மணிக்கு மாதனை காளி கோயில் மைதானத்தில் அதிபர் சி செல்வராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) எஸ். கமலானந்தன் கலந்து கொள்வார்.

(க-117)

## அரியாலையில் பொலீஸ் நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அரியாலை கண்டி வீதி மாம்பழம் சந்தியில் புதிய பொலீஸ் நிலையம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொலீஸ் நிலையம் அரியாலைப் பகுதியை உள்ளடக்கிய எல்லைகளைக் கொண்டு இயங்கவுள்ளது.

இந்தப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரித்து வந்ததை அடுத்தே புதிய பொலீஸ் நிலையம் திறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க—86)

## சைக்கிள்கள் திருட்டு

நவாலி, மார்ச் 25

சுதுமலை வடக்கில் வீட்டு விறாந்தையில் பூட்டிய நிலையில் விடப்பட்டிருந்த இரு சைக்கிள்கள் திருடிச்செல்லப்பட்டுள்ளன.

கடந்த 20ஆம் திகதி இரவு இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

(க-5-100)

## பாகிஸ்தான் பிரஜை கைது

கொழும்பு, மார்ச் 25

ஆபாச சி. டி. வைத்திருந்த பாகிஸ்தான் பிரஜை ஒருவரை, நீர்கொழும்பு பொலிஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து இவரைக் கைது செய்த பொலிஸார் இவரிடம் இருந்து 36 ஸி டிக்களைக் கைப்பற்றினர். இவருக்கு உடந்தையாக இருந்த கண்டியைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைதாகியுள்ளார்.

நீர்கொழும்பு மாவட்ட நீதிவான் இவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

(க)

## விளையாட்டு நிகழ்வு

வலி. வடக்கு, மார்ச் 25

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4-00மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சுன்னாகம் கலைவாணி வி. க. அணியை எதிர்த்து கொக்குவில் வராகி வி. க. அணி மோதும்.

(உ-86)

★ ★ ★

வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும்-யாழ். மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவு அணியை எதிர்த்து யாழ். பிரதேச செயலர் பிரிவு அணி மோதும்.

இதேவேளை —

பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டங்களும் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

(உ-6-86)

## உடப்பில் கிளைமோர் மீட்பு

கொழும்பு, மார்ச் 25

புத்தளத்தில் இருந்து சுமார் 32 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள உடப்புப் பகுதியில் கடந்த புதனன்று கிளைமோர் குண்டு ஒன்று, நூறு கிராம் ரி. என். ரி. வெடிப்பொருள் கட்டி மற்றும் இரு வெடிக்க வைக்கும் கருவிகள் ஆகியன மீட்கப்பட்டதாகப் படை வட்டாரங்கள் அறிவித்தன.

(உ)

## யாழ். நகரில் மீண்டும் குண்டுச் சத்தங்கள்:

# ஷெல் வீச்சு, 'பரா' வெளிச்சத்தால் கரையோரப் பகுதி மக்கள் பீதி

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ் குடாக் கரையோரப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக நடத்தப்பட்டுவரும் ஷெல் வீச்சு மற்றும் 'பரா' வெளிச்சக் குண்டுகளால் இப் பகுதி மக்கள் மத்தியில் பதற்றம் நிலவி வருகிறது. கடந்த சில தினங்களாக ஷெல் வீச்சுக்கள் நடந்து வருவதால் யாழ். நகரப் பகுதி மக்களும் கூட பீதியடைந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கரையோரப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட 'பரா' வெளிச்சக் குண்டுகளில் சில விழுந்து குருநகர் சென் றோக் சன சமூக நிலையத்தின் கூரை சேதமடைந்தது.

வெளிச்சத்திற்காக ஏவப்படும் இந்தக் குண்டுகள் எரிந்து கொண்டே நிலத்தை நோக்கி வந்து விழும் இவ்வாறு விழுந்த குண்டுகள் இந்த சமூக நிலையத்தின் 'சீற்'களின் மேல் விழுந்தன. இதனால் அவை உடைந்து சேதமடைந்தன.

இதேவேளை —

பாஷையூர், கொழும்புத்துறைப்பகுதிகரையோரங்களிலும் பராக்குண்டுகளுடன் ஷெல்களும் தினந்தோறும் ஏவடபட்டு வருகின்றன.

[க-6-5]

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம் மார்ச் 25

வட்டுக்கோட்டைப் பகுதியில் வெள்ளி காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்ஒருவர் காயமடைந்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் இடையில் வெள்ளி நடைபெற்ற கிரிக்கெட். போட்டியைப் பார்க்கச் சென்றுகொண்டிருந்த எஸ் வீலாநந்தன் (வயது 19—ஏழாலை) என்ற மாணவனே விபத்தில் சிக்கிக் காயங்களுடன் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-6-ரி)

★ ★ ★

பாடசாலையில் நடைபெற்ற உயரம் பாய்தல் போட்டியின் போது தவறி வீழ்ந்த மாணவி ஒருவர் இடது கால் முறிந்த நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

வயாவிளான் ம. ம. வி. மாணவியான ரஜனி மாலா (வயது 17) என்பவரே வெள்ளி நடைபெற்ற விளையாட்டு நிகழ்வின் போது காயமடைந்தார்.

உ-6-ரி)

## பிரதேச செயலர் நியமனம்

சங்கானை பிரதேச செயலராக கலாநிதி க. குணராசா நேற்று முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலராக கடந்த சில மாதங்களாக கடமையாற்றிய இவர் அண்மையில் ஓய்வுபெற்றது தெரிந்ததே. தற்போது இவர் ஓய்வின் பின்னர் மீள் நியமனம் பெற்றுள்ளார். (உ-5)

## சல்பர் பசளை எடுத்துவரத் தடை

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சல்பர் பசளை கொண்டுவருவற்குதத் தடைவிதிக்கப் பட்டுள்ளதாகக் கமநல திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)


உ

யாழ். வண்ணார்பண்ணை

## அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோயில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

கிரியைகள் இன்று (25 - 03 - 2001) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் நாளை (26- 03- 2001) திங்கள் பிற்பகல் 2. 00 மணி வரை.

எண்ணெய்க்காப்பு சாத்துதல்:-
25- 03- 2001 ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 4 00 மணி தொடக்கம் 5 00 மணி வரை

கும்பாபிஷேகம்:-
26- 03- 2001 திங்கட்கிழமை
காலை 9. 00 மணி தொடக்கம் 10. 30 மணி வரை

காலை 10 45 மணி முதல்

ஆசியுரை;
நல்லை குருமகா சந்நிதானம்
சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

சமயச் சொற்பொழிவு;
செஞ்சொற்செல்வர்
திரு. இரா. செல்வவடிவேல்
(ஆசிரியர்)

மகா அபிஷேகம்:
நண்பகல் 12.00 மணி தொடக்கம்
தொடர்ந்து நடைபெறும்.

வைரவப் பெருமான் மெய்யடியார்கள் அனைவரும் வந்து கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஞான வைரவப் பெருமானின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தேவஸ்தான அர்ச்சகர்,
திருப்பணிச் சபை.

பீ. ஏ. தம்பி லேன்,
யாழ்ப்பாணம். (85859)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லத்துரை சிவபாக்கியம்

புளியங்கூடல், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை சிவபாக்கியம் அவர்கள் நேற்று (24-03-2001) சனிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வை. செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா — தங்கம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற செ. ஐயாத்துரை மற்றும் பொ. இராசம்மா, இ. இரத்தினம் ஆகியோரின் சகோதரியும், பாலச்சந்திரன், இராசலிங்கம், கணநாதன், பத்மநாதன், கா. சகுந்தலா, ஞா. மனோன்மணி, த. செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பா. தயா, இ. செல்வநாயகி, காலஞ்சென்ற செ. கார்த்திகேசு, செ. ஞானசூரியன், சு. தனபாலசிங்கம், க. வசந்தகுமாரி, ப. உருத்திராம்பிகை ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25-03-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்குப் புளியங்கூடல் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.

புளியங்கூடல். (85857)

### இராமுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் நேற்று (24-03-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பிரபல புகையிலை வியாபாரி இராமுப்பிள்ளை, காலஞ்சென்ற புவனேஸ்வரி தம்பதிகளின் ஏகபுத்திரனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் சாளினி (இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய்), துஷாந்தினி (சென். ஆன்ஸ் மானிப்பாய்), தயாபரன் (ஞானபண்டிதா வித்தியாசாலை, கொக்குவில்), யாழினி (யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25 - 03 - 2001) ஞாயிற்றுக்கிழமை 4.00 மணிக்கு (புதிய நேரம்) தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராமுப்பிள்ளை
(தந்தை)

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில். (சி/15894)

# மீனவர் கரை திரும்பவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்25

கடந்த வியாழனன்று குடாக்கடலில் மீன்பிடிக்கச்சென்ற மீனவர்களுள ஒருவர் இன்னும் கரை திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இந்த மீனவர் சென்றுவிட்டாரா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் நடைபெறுவதாக விசேட ஊடகத் தகவல்மையம் தெரிவித்தது. (உ)

# அன்பை சுவைக்காத மனிதன் பரிதாபத்துக்கு உரியவன்

## 26ஆம் நாள்

## தவக்கால சிந்தனை

அன்பு, இவ்வுலகின் கண் அனைத்துக்கும் ஊற்றாகவும், உயிர்ப்பாகவும் இருப்பது. இது இல்லையேல் உலகம் என்றோ அழிந்து பட்டிருக்கும். மனிதன் தொடக்கம் ஏனைய ஜீவராசிகள் அனைத்தும் அன்பால் ஈர்க்கப்படுகின்றன. உலகில் அன்பைச்சுவைக்காத மனிதன் பரிதாபத்துக்குரியவன். அன்னை தெரேசா உயிருக்கு ஊசாடி மடிந்துவிடப்போகும் ஒரு முதியவருக்கு விலை உயர்ந்த ஊசி மருந்தை ஏற்றினார். அந்த மனிதன் தன் வாழ்வில் அன்பு இன்னதென்றே அறியாதவன். அதனால் அவன் உயிர்வாழும் கடைசி நிமிடத்திலாவது அன்பைச் சுவைத்து இறக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்ததாக அவரின் வாழ்வியல் கூறுகின்றது.

இப்படியான உயர்ந்த அன்பை முதன்முதலில் இறைவன் எம்மீது காட்டினார். அன்பினால் உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் எமக்குப் படைத்தார். இறுதியாகத் தம் பேரன்பை தம் ஒரே பேறான மகனையே எமக்காக அளித்து அதை நிறுவினார். எனவே எம்முழு இதயத்தோடு அவருக்குப் பிரதி அன்பு காட்டவேண்டியது எமது முழுமுதற் கடமையாகும். இறைவன் மோயீசன் மூலம் உலகுக்குத் தந்த 10 கட்டளைகளும் அன்னையை மையமாகக் கொண்டு அமைந்தது. கிறிஸ்து அந்தப் பத்துக் கட்டளைகளையும் இரண்டுக்குள் அடக்கி இதை மனித அன்பாகப் பகுத்தார்.

நான் எவ்வாறு என்னை அன்பு செய்கிறேனோ அது போலவே நான் மற்றவனையும் அன்பு செய்ய வேண்டும் என்பது கிறிஸ்துவின் கூற்று. என்னிடத்தில் எல்லாம் இருந்தும் அன்பு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும் ஆவேன் என்னும் பவுலின் கூற்றுக்கு இறை அன்பும் பிறர் அன்பும் என்னிடத்தில் இல்லையெனில் நான் ஒன்றுமில்லாதவன்.

எனவே இன்று முதல் என்னை அடுத்தவர் அன்பு செய்ய வேண்டும் என விருப்புக் கொள்ளாது அடுத்தவன் இன்பத்திலும், துன்பத்திலும் உதவும் கரமாக நின்று அவனை அன்பு செய்ய முற்படுவோமாக!

**ர.ஜெயராணி.**


## ஹோப் வைத்தியசாலை
## HOPE CLINIC

வாத ரோகமா?, சரும ரோகமா?, மலேரியாவா?, நீரிழிவா?, தொய்வு வியாதியா?, குழந்தைகளின் ரோகங்களா? மற்றும் உடல் மெலிவா?, உடல் பருமனா?, எதுவாயினும தக்க ஆலோசனையும், தகுந்த சிகிச்சையும் அளிக்கப்படும்.

காலை 8.30 - 12.30 } தினமும்
பிற்பகல் 3.00 - 6.00 }

**டாக்டர் த. சிவானந்தன்,**
" ஹோப் வைத்தியசாலை,
216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (85853)



**மிகச் சொற்பப் பிரதிகளே வெளிவந்துள்ளன!**

முதலாந் தவணைப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் மாதிரி வினாத்தாள்கள் 2001 மார்ச்
(சகல பாடங்களும் உள்ளடங்கியது)

**தரம் 8,9,10, O/L வகுப்புகளுக்கானது.**

வெளியீடு : *முன்னோடிப் பரீட்சைகள் நிறுவனம். (I.P.E) இலங்கை.*

கிடைக்குமிடம்:

**பூபாலசிங்கம் புத்தகசாலை** (85809)



## இன்று அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்
லாலாவின்
அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு
இன்று (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4.00 மணிக்கு
நடைபெறும் என்பதை
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
லாலா சோப் ஸ்தாபனத்தினர்,
அச்சுவேலி. (C/15890)


# கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்க உப செயலாளரும், சமூக சேவையாளருமான

## அமரர் க.குமாரசாமி

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அவர் மனைவி, பிள்ளைகள், தந்தையார்க்கு எமது நிர்வாகிகள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆன்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள்,
உரும்பிராய் வடக்கு,கிராம முன்னேற்றச் சங்கம் (85851)

# உள்ளகப் பயிற்சிக்கு 19பேர் நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.மருத்துவபீடத்தின் வைத்திய மாணிப் பரீட்சையில் சித்தியடைந்த 43 பேரில் 19 பேர் ஒரு வருட உள்ளகப் பயிற்சிக்காக நேற்று முதல் யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (உ-6-139)

# வெள்ளைப் பூரானால் மேலும் இருவர் கடியுண்டனர்

தென்மராட்சி,மார்ச்25

வடமராட்சிப் பகுதியில் வெள்ளைப் பூரானால் கடியுண்ட மேலும் இருவர் கடந்த வியாழனன்று மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேலி அருகே காணப்பட்ட பனை ஓலையை எடுத்த - அல்வாய் திக்கத்தைச் சேர்ந்த - ஆனந்தராசா தீபன் (வயது16) என்பவரும், வெங்காய அறுவடையில் ஈடுபட்டிருந்த- பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த - வல்லி இலச்சுமி (வயது 55) என்பவரும் வெள்ளைப் பூரானால் கடியுண்டனர்.

கடந்தவாரம் வடமராட்சிப் பகுதியில் மூவர் வெள்ளைப்பூரானால் கடியுண்டிருந்தனர் என்பது தெரிந்ததே. (உ-117)

# வலிப்பு வந்து மரணம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

நல்லூர் பகுதியில் வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சிற்றூழியர் ஒருவர் வீதியில் வலிப்பு வந்து வீழ்ந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

வாதரவத்தை, புத்தூரைச் சேர்ந்த வயித்துலிங்கம் குகநாதன்(வயது-39) என்ற குடும்பஸ்தரே நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இவ்வாறு மரணமானார்.

இவரது சடலம் ஏனைய தொழிலாளர்களால் எடுத்து வரப்பட்டு யாழ். போதனா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. மரணவிசாரணைகளுக்காக யாழ்.போதனாவைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (உ-6-ரி)

# மானிப்பாயில் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,மார்ச்25

சிவிலியன் ஒருவர் கொடுத்த தகவலின் பேரில், கடந்த வெள்ளியன்று மானிப்பாயில் நன்கு அமைக்கப்பட்டிருந்த 'கொங்கிரீட்' குழி ஒன்றினுள் இருந்து பெருமளவு ஆயுதங்களைப் படையினர் கைப்பற்றியதாகப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)


## புலமைப்பரிசில் - 2001

32ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்.

ஜெ. நிரோஜன் - 175
யா/இ/ஆ/பா.
ஆ. ஜதிகானந் - 175
ந. திருத்தணிகன் - 174
யா/இ/ஆ/பா.
பே. கபில் - 174
யா/கோண்டாவில் சி/சி/த/க/பா
இ. கதுஷா - 171

BOND - யாழ்நகர் (85848)



## SHAMROCK
## A/L 2003

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

| | |
|---|---|
| COM. | Mr. பசில் |
| ACC. | Mr. தவா |
| EC. | Mr. இராஜேஸ்வரன் |
| | Mr. ஜெயக்குமார் |
| ENG. | Mr.Ra.RAJESH |
| CHRIS. | Mrs A. மல்லிகா |
| HINDU. | Mr. நித்தி |
| TAM. | Mr. அருள் |
| LOG. | Mr. மகிந்தன் |
| GEO. | Mr. கிரி |
| DRAMA. | Mr. ஜோன்சன் |
| C/Ma. | Mr. தவசேகர் |
| PHY. | Mr. ஸ்பெல்மன் |
| CHE. | Mr. கரன் |

(C/15882)



## கணனியில் உயர்கல்வி
## B.Sc. (Computer Science)

எமது நிறுவனம் University of Guildhall London உடன் இணைந்து B.Sc. (Computer Science) பட்டப்படிப்பு கற்கை நெறிகளை ஆரம்பித்துள்ளது.

இக் கற்கை நெறியானது மூன்று வருடங்களைக் கொண்டது. முதலாவது வருடம் எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் ஆரம்பக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்வதன் மூலம் தாங்கள் University of Guildhall இற்கு தெரிவு செய்யப்படுவீர்கள். தங்களிற்கான அனுமதிகள் தங்குமிட வசதிகள் யாவும் பல்கலைக் கழகத்துடன் இணைந்து எமது நிறுவனத்தினால் ஏற்பாடு செய்து தரப்படும்.

**கல்வித் தகைமைகள் :**

1. G.C.E.(A/L) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். *அல்லது*
2. G.C.E. (O/L) சித்தியுடன் Diploma in Computer Science ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனத்தில் பெறப்பட்டிருக்க வேண்டும்.
3. ஆங்கிலம் விசேட சித்தியடைந்திருத்தல் வேண்டும். *அல்லது* எமது நிறுவனத்தால் நடத்தப்படும் ஆங்கிலக் கற்கை நெறிகளில் கட்டாயம் பயின்று குறித்த ஒரு வருடத்துக்குள் பல்கலைக்கழகத்துடன் இணைந்து எம்மால் நடத்தப்படும் ஆங்கிலப் பரீட்சையில் சித்தி எய்தல் வேண்டும்.
4. 18வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கற்கை நெறி ஏப்ரல் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கற்கை நெறிக்கு மேலதிகமாக 20 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள எமது நிறுவனம் தீர்மானித்துள்ளது. எனவே கற்கை நெறிக்கான விண்ணப்பத்தினை எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

**விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:**

1. G.C.E.(A/L), G.C.E.(O/L), சான்றிதழ்கள்
2. கணனிக் கற்கை நெறியில் ஏற்கனவே ஏதாவது சான்றிதழ் பெறப்பட்டிருப்பின் அச் சான்றிதழ்.
3. தேசிய அடையாள அட்டை.
4. ஏதாவது தொழில் புரிந்தால் குறித்த நிறுவனத்தால் தங்களின் சேவையை உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்.

**குறிப்பு:**

மேற்படி ஆவணங்கள் யாவும் 2 புகைப்படங்களுடன் எமது கிளைப் பணிப்பாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் கற்கை நெறிக்குத் தெரிவானவர்கள் 04 கலர் புகைப்படப் பிரதிகளை (Visa Size Colour Photo) கற்கை நெறி ஆரம்பிக்கும் போது ஒப்படைக்க வேண்டும்.

மேலதிக விவரங்களை எமது நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுங்கள்.

**DCS College of Computer Technology**
**No. 124/2, Palaly Road, Thirunelvely, Jaffna.**

**DCS College of Computer Technology**
**N.M.V. Road, Nelliyady, Karaveddy.** (C/15893)


# மரண அறிவித்தல்கள்

## கதிரன் இலகுநாதன்

(முன்னாள் துணை ஆளணியின்- கோப்பாய் ஆசிரிய கலாசாலை, முன்னாள் தலைவர்- மகாத்மாஜி சனசமூக நிலையம், முன்னாள் பொருளாளர்- திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரிஅம்மன் தேவஸ்தானம், தற்போது துணை ஆளணியினர்- யாழ்.இந்துக் கல்லூரி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் இலகுநாதன் அவர்கள் நேற்று(24.03.2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கதிரன் - பழுத்தாலி தம்பதிகளின் அன்புமகனும், கந்தன்-குஞ்சு தம்பதிகளின் அன்பு மருமகனும், பொன்மலரின் பாசமிகு கணவரும், சசிதரன், சதாகரன், சசிகலா, சரிதா, விநோதினி, சசிகுமார், விணோபா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லி, முத்தையா, வேலாயுதபிள்ளை, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருநெல்வேலி.*

தகவல்:
இ.சசிதரன(மகன்)
- தேசிங்

(C/15892)

## செல்வரத்தினம் சுதர்சன் (சுதன்)

சங்கானை நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பில் வசித்தவரும் ஆகிய செல்வரத்தினம் சுதர்சன் (சுதன்) 21.03.2001 புதன்கிழமை இரவு கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் செல்வரத்தினம் - பேபி தம்பதிகளின் அன்புமகனும், தர்சினி, சுசிரேகன், சாமினி, நிதர்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் விழாவெளி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*விக்னேஸ்வரா வீதி,*
*நிற்சாமம்,*
*சங்கானை.*

தகவல்:
சி.செல்வரத்தினம் (S.K.)
(தந்தை)
சங்கானை M.P.C.S.

(85854)

# வடக்கின் மாபெரும் மோதல் வெற்றி தோல்வியின்றி முடிவு

சென்றல் - சென்.ஜோன்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று நடந்து முடிந்த - வடக்கின் மாபெரும் மோதல - வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 280 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

தொடர்ந்து ஆடிய சென்றல் அணி தனது முதல் இன்னிங்ஸில் 149 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதனையடுத்துத் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்திற்குக் களமிறக்கப்பட்ட சென்றல் அணி ஆட்ட முடிவுவரை துடுப்பெடுத்தாடி 6 விக்கெட் இழப்புக்கு 183 ஓட்டங்களைப் பெற்றது.(உ-9)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் பொறுப்பைத் தொடர்ந்தும் வகிப்பார் என்றும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய ஆணையாளராக துவைத்திலிங்கம் பொறுப்பேற்றதும், தற்போது பதில் மாநகர ஆணையாளராகப் பணிபுரியும் இராசா. தணிகாசலம் தமது நிர்வாக அதிகாரி பதவியைத தொடர்வார் என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன. (உ)

## பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் குறிப்பிட்டன.

"பேச்சுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தடங்கல் ஏதுமின்றி நடைபெறுகின்றன. இதில் படிப்படியாக முன்னேற்றம் காணப்படுகிறது. பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியானதும் இரு தரப்பும் ஒரே மேசையில் அமர்ந்திருந்து பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளமுடியும்"

- இவ்வாறு அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது. (உ)

## விவரம் தரக் கோரிக்கை

யாழ்பாணம்,மார்ச்25

சுகாதாரம், சுதேச மருத்துவம், ஆயுள்வேதம், கல்வி, உயர்கல்வி, பரீட்சை, கல்வி வெளியீடு, தகவல் தொழில் நுட்பம், தொழில் நுட்பக் கல்வி போன்ற திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் மீதான வரவு - செலவுத் திட்ட விவாதம் நாளையும் மறுதினமும் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விவாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, தெளிவுபடுத்தப்பட வேண்டிய விவரங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நபர்கள் இன்று மாலைக்குள் தமக்குத் தந்துதவலாம் என்று யாழ்.மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ)


எமது பிரமிட் & பைவ் ஸ்ரார் வீடியோ CD வெளியீடு

※ தாலி காத்த காளியம்மன் ※ ரிஷி
※ உள்ளம் கொள்ளை போகுதே ※ லூட்டி

ஓடியோ CD வெளியீடு

T.ராஜேந்தரின்
※ சொன்னால் தான் காதலா ※ தீர்ப்புக்கள் மாற்றப்படலாம்

பக்திப்பாடல் ஓடியோ CD

※ ஓங்காரி மாரியம்மா - L.R.ஈஸ்வரி ※ அம்மன் இசை - S.ஜானகி
※ ஆத்தா ஆவேசக்காரி - வீரமணிதாசன் ※ காளி திரிசூலி - ராஜராஜசோழன்
※ ஜெகமாளும் தாயே - வீரமணிதாசன் ※ அம்மன் தீமிதி பாடல்கள்

Note: எம்மிடம் வீடியோ CD களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
புதியது-75/= பழையது- 50/=

☆ இளைய தலைமுறையின் உன்னத இசைப் பதிவகம்
வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்
297, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி
கிளைகள்: ※ மாக்கற் - சங்கானை
※ நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (85860)

நாளை வெளிவரமாட்டாது!

"நவீன நிதிக் கணக்கீடுக் கோட்பாடுகள்"

என்னும் நூல் (2ஆம் பதிப்பு) முன்பு அறிவித்தது போல் நாளை வெளிவரமாட்டாது என்பதை மாணவர்கள், ஆசிரியர்தளுக்கு மிகக் கவலையுடன் அறியத்தருகின்றோம்.
ஆசிரியர் - D.SAM
வெளியீடு - DMI
(C/15886)
குறிப்பு: 05.04.2001 அன்று நூல் வெளியிடப்படும்.

லக்சுஷி பான்சி கவுஸ்
ஆடியபாதம் றோட் கொக்குவில்
ஈசன் மொத்த விற்பனையாளர்
(சதானந்தன்)
63.பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி
ஆதரவில்
இறுதித்தடவையாக
கைலாசபதி கலையரங்கில்
உயிர்விசை
(நாடக ஆற்றுகை)
25~03~2001
ஞாயிற்றுக்கிழமை
10.30 (பு.நேரம்) 3.30
காணத்தவறாதீர்கள்
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்


## பெரும் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைகளை விட்டு ஓடியோரில் 4 ஆயிரத்து ஐந்நூறு பேர் மீண்டும் படைகளில் இணைந்துள்ளனர். இவர்களைத் தவிர, 3 ஆயிரத்து ஐந்நூறு பேர் புதிதாகப் படைகளில் சேர்ந்துள்ளனர்.

விசேட படைப்பிரிவைச் சேர்ந்த எண்ணூறு பேருக்கு கொமாண்டோப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

"எந்தச் சவாலையும் எதிர்கொண்டு வெற்றிகரமாக முறியடிக்கக் கூடிய தயார் நிலையில் நமது படைகள் உள்ளன" - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-6)

## $3\frac{1}{2}$ கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலிருந்து தமது உத்தியோகபூர்வ வாகனத்தில் - தந்தையாரின் உத்தியோகபூர்வ மெய்ப்பாதுகாவலரான பொலீஸ் கான்ஸ்டபிளின் உதவியுடன் - கடத்திக் கொண்டு வந்த சமயமே அமைச்சரின் மகன் கைது செய்யப்பட்டார்.

இக்கடத்தல் குறித்துத் தகவல் கிடைத்ததும் கொம்பனித்தெரு பொலஸார் சம்பந்தப்பட்ட வாகனத்தை மறித்து அமைச்சரின் மகனையும் பொலீஸ் கான்ஸ்டபிளையும் கைது செய்தனர்; வாகனத்திலிருந்த மூன்றரைக் கிலோ தங்கக் கட்டிகளையும் கான்ஸ்டபிளின் ஆயுதத்தையும் அவர்கள் மீட்டனர். அமைச்சரின் உத்தியோகபூர்வ வாகனம் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் மகனும் பொலீஸ் கான்ஸ்டபிளும் இன்று நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கடத்தல் மற்றும் கைது விவகாரம் நேற்று நாடாளுமன்றத்தில் அரசுத்தரப்பு எம்.பிக்களுக்கும் எதிர்த்தரப்பு எம்.பிக்களுக்கும் இடையில் பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்தது. (உ-6)

## பெரும் ஆயுத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைய மிகப்பெரிய ஆயுதக்கிடங்கை நாம் இப்போதுதான் முதல் தடவையாகக் கண்டுள்ளோம். நாம் கைது செய்த இரு முக்கிய புலிச் சந்தேக நபர்கள் தந்த தகவல்களே இந்த ஆயுதக்கிடங்கை கண்டுபிடிக்க உதவின" - என்றார் அந்தப் பொலீஸ் அதிகாரி.

"இந்த ஆயுதங்களை எடுத்து வந்து களஞ்சியப்படுத்தியதில் தொடர்புபட்ட மேலும் ஐந்து சந்தேக நபர்களை நாம் தேடிவருகின்றோம்" - என்றும் அந்த அதிகாரி கூறினார்.

- இப்படி அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த ஆயுதக் கிடங்கு எங்கிருந்தது என்பது பற்றிய தகவல் தெரியவரவில்லை.

(குடாநாட்டில் ஆயுதக் கிடங்கு ஒன்று கைப்பற்றப்பட்டது தொடர்பாக விசேட ஊடகத் தகவல் மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பின் விவரம் 13 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.)

(உ)


விண்ணா
கல்வி நிறுவனம் - யாழ்நகர்.
பிரிவு 2 O/L DAY CLASS
8.30 - 2.00
ஆரம்பமாகிவிட்டன.
பிரிவு 3 மிக விரைவில்.
(85794)

வீடுகள் விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடுகள் விற்பனைககுண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர்களுக்கு கொமிஷன் கொடுக்கப்படும்.
விளம்பர இல:- 1230
மே/பா. உதயன்


# பொன் அணிகள் போரில் சென். பற்றிக்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம்,மார்ச்25

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நேற்று நடந்து முடிந்த 84 ஆவது பொன் அணிகள் போரில் சென்.பற்றிக்ஸ் அணி இன்னிங்ஸாலும், 77 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் அணி 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 268 ஓட்டங்கள் என்ற நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

சென்.பற்றிக்ஸ் அணியின் ஏ.ஆர். சேர்ச்சில் ஆட்டமிழக்காது 155 ஓட்டங்களைப் பெற்றுச்சாதனை புரிந்தார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸிலும் 101 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து தோல்வியடைந்தது.

(உ-9)

## ஸ்கந்தா 98 ஓட்டங்கள்

சுன்னாகம்,மார்ச்25

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான "வீரர்களின் மாபெரும் துடுப்பாட்டப் போர்" நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி 98 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆட்டம் இன்று காலை 9மணி முதல் தொடர்ந்து நடைபெறும். (உ)


வெளிவந்துவிட்டது!
வெளிவாரி விளைவுகள்
பொருளியல் நூல்
நவீன கருத்துக்கள், வினாவிடைப் பயிற்சிகள் சேர்க்கப்பட்ட
இரண்டாவது பதிப்பு
ஆசிரியர்: வே.கருணாகரன்
(85753)

இருபாலையில் அமைதியான சூழலில்.....
30க்கு உட்பட்ட மாணவர்களைக் கொண்ட
PERSONAL CLASS
A/L 2003
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பாடங்கள்
யாழ். நகரில் பிரபல்யமான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
மார்ச் 31இல் ஆரம்பம்
பெயர், பதிவுகள் ஏற்கப்படுகின்றன.
-அதிபர்.
The Express Institute
Irupalai, Kopay. (C/15849)


# மரண அறிவித்தல்கள்

## தம்பு செல்லையா

தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீர்வேலி வடக்கைச் சேர்ந்தவருமான தம்பு செல்லையா நேற்று (24.03.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம் (ராஜ்மணி), யோகம்மா, பேபி, சரோஜா, சந்திரசேகரம், கசிலதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் சகுந்தலாதேவி, இரத்தினசிங்கம் தேவமனோகரன், ரஞ்சினி, தில்லைராஜன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாகவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ராஜ்மணி பந்தல் சேவை,*
*நீர்வேலி வடக்கு.*
(C/15895)
தகவல்:
செ.சுப்பிரமணியம்
(C.T.B.)

## அருமைலிங்கம் டன்ஸ்ரன் சுரேஷ்குமார் (பாபு)

அல்வாய் மடத்துக்கடவையைச் சேர்ந்த அருமைலிங்கம் - சுகிர்தமலர் தம்பதிகளின் அருமை மகன் டன்ஸ்ரன் சுரேஷ்குமார் (பாபு) நேற்று (24.03.2001) சனிக்கிழமை இரவு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அதிபர் K.D. மாணிக்கம் - பாக்கியம் ஆகியோரின் அன்புப் பேரனும், சுலோஜினி, ஜீவராணி, அருளானந்தசோதி, சதீஸ்குமார், சுஜீவா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருளானந்தசோதி அருமைத்துரையின் (தபாற்கந்தோர் - வல்வெட்டித்துறை) மைத்துனரும், J.S. கிறிஸ்ரதாஸ் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), J.S.சத்தியநாதன் (பனை அபிவிருத்திச் சபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று பிற்பகல் 4.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்துக்கடவை,*
*அல்வாய்.*
தகவல்:
(C/15892) அ.அருளானந்தசோதி

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.